www.tamilarangam.net


தமிழ்மன்றவெளியீடு

# தமிழ்நாதம்

இதழ் 7

ஐப்பசி 91










**தமிழ்க் கல்வித்துறையில்**
**கொம்பியூட்டர் அறிமுகம்**
**தமிழ்மன்றத்தின் புதிய முயற்சி**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கிருஷ்ணா

## KRISHNA INDIAN SHOP
## CEYLON SHOP

சகலவிதமான உப/கடல் உணவுப்பொருட்களையும், மற்றும் இலங்கையிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களையும், மரக்கறி வகைகள், புதிய பழைய திரைப்படங்கள், பாடல்களை Video cassette, Audio cassette & CD ஆகிய வடிவங்களிலும்; தமிழ், ஆங்கில சஞ்சிகைகளையும், வாழ்த்துமடல்களையும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள இதோ உங்களுக்காக!

**கிருஷ்ணா**

**உங்களுக்கு தேவையான, விரும்பிய டிசைன்களில் தங்கநகைகளை ஒரு கிழமையில் பெற்றுக்கொள்ள!**

**கிருஷ்ணா**

*உங்கள் உல்லாசப்பயணத்தை, இலகுவாக மேற்கொள்ள குறைந்த விலையில் உடனுக்குடன் விமானப் பயணச் சீட்டுகள் ஒழுங்கு செய்து தரப்படும்.*

*உங்கள்*

*அன்பையும்*

*ஆதரவையும்*

*எதிர்பார்த்து*

*கிருஷ்ணா கிருஷ்ணா கிருஷ்ணா*

**KRISHNA INDIAN SHOP,**
*ELBESSTR – 12,*
*6000 FRANKFURT 1.*
*Tel: 069/235757.*
*Fax: 069/251230.*

***

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ் மன்றம் TAMIL MANTRAM e.V. FRANKFURT

தமிழ்மன்ற வெளியீடு

# தமிழ்நாதம்

இதழ் 7 ஐப்பசி 91

## இதழின் உள்ளே

பத்திரிகைக் குழுவினர்:

திரு.எஸ்.சிவசுப்பிரமணியம்.
திருமதி.கமலா கனகசபை.
திரு.ஆர்.சஞ்சயன்.
திரு.பி.பாலசுப்பிரமணியம்.
திரு.எ.சொர்ணலிங்கம்.
திரு.ஆர்.ரவிசங்கர்

தொடர்பு:
ஆசிரியர் தமிழ்நாதம்.

Mr.S.Sivasubramaniam,
Falltorstr 25,
6000 Frankfurt 60.

* ஆசிரியருடன் ஒரு நிமிடம்.
* கண்ணோட்டம்.
* சமையல் குறிப்பு.
* சிறுகதை.
* தொடர்கதை.
* கவிதைகள்.
* பெருங்கவிக்கோ தமிழ்மன்ற விஜயம்.
* ஆய்வுக் கட்டுரை.
* சிறுவர் பூங்கா.
* உருவகம்.
* கலைக்கண் வீடியோவிற்கு தமிழ்மன்றம் நன்றி நவில்கின்றது.
* விளையாட்டுச் செய்திகள்.
* மன்றச் செய்திகள்.
* விசேட விரத தினங்கள்.
* அறிவித்தல்.

*இவ்விதழில் வழமையான சில பகுதிகளும், கடந்த குறுக்கெழுத்துப் போட்டி முடிவுகளும் இடம் பெறவில்லை. அவை மீண்டும் அடுத்த இதழில் வெளியாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

www.tamilarangam.net

# ஆசிரியருடன் ஒரு நிமிடம்

*இருள்சேர் இருவினையும் சேரா, இறைவன்*
*பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.*

தமிழ்நாதம் முதலாம் ஆண்டுமலராக வெளிவரவேண்டிய இவ்விதழ் மீண்டும் ஆண்டு மலர்த்தயாரிப்பில் ஏற்பட்ட தடங்கல்களினால் தமிழ்நாதம் இதழ் 7 ஆக வெளிவருகின்றது. வாசக நேயர்களின் ஆர்வத்தை தூண்டிவிட்டு ஏமாற்றத்தை ஏற்படுத்தியதற்கு ஆசிரியர்குழு மன்னிப்பு கோருகின்றது. எமது அடுத்த இதழ் நிச்சயம் ஆண்டுமலராக மலரும்.

இவிதழில் ஆசிரியர் குழுவின் கவனத்தைக் கவர்ந்திருக்கும் விடயம் ஜேர்மனியில் பிறநாட்டவர்கள் தொடர்ந்து வாழமுடியுமா என்பதுதான். ஜேர்மன் நாட்டை முன்னேற்றப்பாதையில் இட்டுச்செல்ல முன்னைய ஜேர்மன் அரசுகளினால் அழைக்கப்பட்ட வெளிநாட்டு வேலையாளர்களும், தமது தாய்நாடுகளில் ஏற்பட்ட கொந்தளிப்புகளினால் ஜேர்மனியில் தற்காலிகமாக வாழுகின்ற பிறநாட்டவர்களும் பல மாநிலங்களில் பயங்கரமாக தாக்கப்பட்டிருக்கின்றார்கள். முக்கியமாக புதிய ஜேர்மன் மாநிலங்களில் இதனைத் தடுப்பதற்கு அரசியல்வாதிகளும் சட்டக்காவலர்களும் எவ்வளவு தூரம் முயலக்கூடும் என்பது கேளிக்குறிதான். இந்நிலை ஜேர்மனியில் மட்டுமன்றி உலகம் முழுவதும் ஏற்பட்டிருப்பது மிகவும் வேதனைக்குரிய ஓர்விடையம்தான். ஒவ்வொரு நாடும் தம் நாட்டின் சமூக பொருளதார இலாபங்களுக்காக மற்ற நாடுகளுடன் இணைத்துக்கொள்வதும், அல்லது தம் நாட்டின் எல்லைக்குள்ளேயே சிறுபான்மையினரைச் சூறையாடுவதும் நாட்டைத்துண்டு போடுவதும் அன்றாடம் நடக்கும் சம்பவங்களாகிவிட்டன. இவற்றைத்தான் நாம் இன்று ஐக்கிய ஜேர்மனியிலும், சோவியத்யூனியனிலும் யூகோஸ்லாவியாவிலும் கண்கூடாகக்கண்டு கொண்டிருக்கின்றோம்.

தம் தாய் நாட்டிலும் நிம்மதியாக வாழமுடியாமல், தஞ்சம் புகுந்த நாட்டிலும் தயங்கித்தயங்கி வாழ்ந்து கொண்டிருக்கும் இவ்வரசியல் அகதிகளின் தலைவிதியை ஜேர்மன் அரசியல் தலைவர்கள் எப்படித்தீர்மானிக்கப் போகிறார்கள் என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்.

தமிழ்நாதம் ஆரம்பிக்கப்பட்ட காலங்களில் இருந்து எமது பத்திரிகைகளை மிகவும் பொறுப்புணர்வோடு பலநாட்கள் இரவுபகலாக அச்செழுத் துக்களுக்கு ஈடாக கையெழுத்தாக எழுதிய திரு. A.சொர்ணலிங்கம் அவர்களுக்கு இங்கு நாம் நன்றி தெரிவிக்கக் கடமைப்படுகின்றோம்.

www.tamilarangam.net



# நாடுகள் மக்கள் மதங்கள் பல, ஆனால் சேரும் இடம் ஒன்று

கீழ்கரவை-பொன்னையன்
-பரீஸ்-

## சிவசமயம் – இந்துமதம்

இந்த 'சிவா'வின் தலைமை கொண்ட சிவசமயம் – இந்துமதம் எப்போது தோன்றியது? கால எல்லையைக் காணமுடியாது என்றே பதில் வரும். ஆனால், கிறிஸ்தவ, புத்த, முஸ்லிம் என்ற மதங்களுக்கு முற்பட்ட காலத்தில் சிவசமயம் தோன்றியது என்பது எமது பழக்கத்தில் காணப்படும் உண்மை.

திராவிட – ஆரிய என்ற இருபதமும் நம் கவனத்தை அடிக்கடி ஈர்ந்து வருவது கண்கூடு, மதம் என்பது எண்ணிப்பார்க்க முடியாத காலத்தில் தோன்றியிருக்க வேண்டும். மதத்தின் பிறப்பிடம் ஒன்றாக இருப்பினும் கடைபிடித்த வழிமுறையால் பலவகைப்பட்டு விட்டன. திராவிட ஆரிய பிரிவுகளுக்கு மத்தியில் இந்துமதம் ஐரோப்பிய ஆரியத்தினின்று கீழைத்தேச ஆரியம் வேறுபட்டிருந்தது.
இதைப்போன்று திராவிட இனம் ஒன்று தனித்து ஒரு பெரிய இனமாக இருந்தவகையில் – அதுவும் தனித்துவமான மதத்தைத் தழுவி இருந்தது. பொதுவாக இயற்கையைத் தனது மதத்தின் சின்னமாக வழிபட்ட அவர்கள் – கீழைத்தேச இனமாக நாம் ஒரே குடைக்கீழ் 'சிவசமயம் – சைவசமயம்' என்று இணைந்து விட்டோம்.

தமிழினம் 'கல்தோன்றி மண்தோன்றிய' இனம் என்பர் அப்பொழுது தோன்றிய மதமாக வேண்டும் – சிவமதம்.

பரிணாமவளர்ச்சியில் – மனித இனம் வளர்ந்து கொண்டு வரும் போது சமயப்பற்றும் வழிபடும் முறைகளும், தெய்வபக்தியும் ஒன்றிணைந்து வந்துள்ளன.

ஒவ்வொரு நாட்டினரும் ஒவ்வொரு மதத்தில் தன்னையும் அறியாது இணைந்து வாழ்ந்து வந்த அவர்கள் பிறமதத்தை ஆரம்ப கால கட்டத்தில் உணர்ந்து இருக்கவில்லை என்பது உண்மை. அதற்காகபிற மதங்கள் இருக்கவில்லை என்றும் கூறமுடியாது.
தமக்குத் தெரிந்த மதத்திற்கு ஒரு பெயரை வைத்தார்கள்.

கிறிஸ்துவின் பிறப்பால் உணர்ந்த மதத்திற்கு 'கிறிஸ்தவமதம்' என்றும், முகமதுனபியின் பிறப்பால் 'முகமது மதம்' என்றும் புத்தரின் பிறப்பால் 'புத்தமதம்' என்றும் தோன்றியது.

ஆனால் எவர் பிறப்பும் இல்லாதது. இறப்பு பிறப்பற்ற ஒரு பரம் பொருளை வணங்கி 'சிவன்மதம்'என்று ஒன்று நம் இனிய மொழியாளர்களால் வணங்கப்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரு பிறப்பில்தான் இந்துமதம் சிவமதம் வளர்ந்ததல்ல. சிவனை உணர்ந்துதான் இந்துமதம் வந்தது. சிவன்மதத்தைதான் இந்துமதம் என்றும் சைவமதம் என்றும் வணங்குகின்றார்கள். வணங்கும் முறையால் ஒரு மதமாகினர் இந்துமதம் எப்பொழுது தோன்றியது என்பதை எம்மால் கணித்துவிட முடியாது. ஆனால் நம்மதத்திற்குரிய – இன்றியமையாத மூல நூல்களைப்பற்றி முழுமையாக அறியமுடியாத காரணத்தால் இதற்குத் துணை நூல்களை வைத்து இந்துமத த்தின் தொன்மையை உணரலாம்.

வள்ளுவர் தந்த திருக்குறள் யேசு பிறப்பதற்கு முன் உருவானது. வள்ளுவர் பிறப்பால் யேசுவை முந்தியவர் மட்டுமல்ல – சொற்கருத்தால் பைபிலைத் தன்விகராக்கியது.

பைபிலில் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என இரண்டு இருப்பதனால் புதிய ஏற்பாட்டிற்கு முந்தியது திருக்குறள். அதேவேளை பழைய ஏற்பாடு முற்றுப்பெறும் போது திருக்குறளும் முற்றுப் பெற்றுவிட்டது.

இந்து மதத்திற்கு இராமாயணமும், மகாபாரதமும் ஒரு தொடுனூலாக இருக்கின்றன. இராவணன் ஒரு சிவபக்தன் என்பதும் இராமா ஒரு தெய்வ அவதாரம் என்றும் கூறப்படுவதை நாம் அறிகிறோம். இராவணன் ஒரு திராவிடனாகவும் இராமர் ஓர் ஆரியனாகவும் காணலாம். இந்த இராம இராவண காலம் கி.மு 1600 ஆண்டு என வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் தெரிய வைத்துள்ளனர். ஆனால் கிறிஸ்தவ மத மூல நூலான பழைய ஏற்பாடான பைபில் கி.மு 1200இல் ஆரம்பமாகி 1200 ஆண்டுகளின் பின் முடிவுற்றது. இந்தவகையில் சைவ சமயம் முன்பே நடைமுறையில் இருந்துள்ளது என்பது உண்மை.

இராம இராவண யுத்தத்தின் பின் 600 ஆண்டுகள் கழித்து மகாபாரத யுத்தம் கி.மு 1000 ஆண்டு நடை பெற்றது. அப்போதுதான் பகவத்கீதையும் உதையமானது. பகவத்கீதை உருவானபோது பழைய ஏற்பாடான பைபில் முற்றுப் பெறவில்லை. பைபிலுக்கு ஆரம்பச்சுழி மட்டுமே போடப்பட்டிருந்தது.

இந்து மதத்தில் – சிவமதத்தில் உள்ளவன் கடவுளை நம்புகிறான். பிறமதத்தவர்கள் மனிதர்களையும் அவர்களால் உருவாக்கப்பட்ட கோட்பாடுகளையும் மட்டுமே நம்புகிறார்கள் என்ற எண்ணமே பொதுவாகத் தோன்றுகிறது.

மகாத்மா காந்தி ஓர் இந்துவாக இருந்துகொண்டு கிறிஸ்தவ மதத்தையும் நேசித்த ஒருவர். உண்மையில் காந்தி எப்போதோ கிறிஸ்தவ மதத்தில்மாறி இருப்பார். ஆனால், கத்தோலிக்கரின் முரன்பட்ட விக்கிரக ஆராதனை இந்துக்களின் விக்கிரக ஆராதனையை விட எந்தவிதத்தில் சிறந்தது என்பதே அவரது கேள்வியாக இருந்துள்ளது என்பதைப் பல அறிஞர்கள் நுட்பமாக அறிந்து உறிதிப்படுத்தியுள்ளார்கள்.

இந்து – சிவமதத்திற்கும் மற்றைய மதத்திற்கும் உள்ள வித்தியாசத் தில் மிகமுக்கியமானது சிவமதம் – இந்துமதத்தில் அகக்கட்டுப்பாடுதான் அதிகம். பிறமதங்களில் புறக்கட்டுப்பாடுகள் தான் அதிகம். புறத்தை விட அகக்கட்டுப்பாடும், அகச்சுத்தமும் மிகமுக்கியமானது.

இறைவழிபாட்டிற்கு மிக முக்கியமானது உள்ளமும் அன்பும் இவை அடங்கிய சிந்தனையுமே. இவை இந்துமதத்தில் அதிகமாகக் கலந்துள்ளது.

www.tamilarangam.net

இந்து மத நூல்கள் இவைகளை நன்கு வலியுறுத்தும்போது அந்த நூல்களைத் தூற்றும் ஒரு பிறமத கூட்டத்தினரை நாம் அன்றாடம் வாழ்க்கையில் காண்கின்றோம். ஆனால் ஒன்று.....

பைபிலைப் பொய்பேசும் நூல் என்று கிறிஸ்தவர்களும், திருக்குர்ரானைப் பொய்பேசும் நூல் என்று முஸ்லிம் மதத்தினரும் கூறுவார்களா?

இறைவனை நேரில் கண்டபரம் ஞானிகள் திருவாய் மலர்ந்த தேவாரம், திருப்புகள், திருக்குறள் இவைகளைப் பழிப்பது நம் தாயை நாம் பழிப்பது போலாகும்.

பைபிலில் ISAIAH இசையான என்று ஒரு ஞானியாரிடம் நல்ல கருத்துக்களும் உண்டு. இவர் ஒரு தமிழர் என்று இன்று ஆளடையாளம் காட்டி வலியுறுத்தி வரும் கிறிஸ்தவர்களும் உண்டு. ஆனால் நிச்சயமாகத் தமிழராக இருக்க முடியாது. பைபில் உருவானகாலத்தில் தமிழில் ஒரு பைபில் இருந்த தில்லை. இசையா என்பவர் தமிழராக இருந்தால் அவர் ஏன் அதை தமிழில் ஒரு பைபில் உருவாக்கி இருக்கக்கூடாது.

19ம் நூற்றாண்டில் வீரமாமுனிவர் என்பவரின் வேண்டுகோளுக்கிணங்க ஓர் இந்துவான திரு. ஆறுமுக நாவலர் அவர்கள் பைபிலைத் தமிழில் மொழி பெயர்த்தார். ஆனால் அவர் இறுதிவரை ஓர் இந்து மதவாதியாகவே இருந்தார்.

இதன் மூலம் தெரிவது, மதமாற்றம் தேவையற்ற ஒன்று. மனித மனம் மானிடத்தை நேசித்து – தெய்வ நெறியில் வாழ்ந்தால் அவன் எந்த மதத்தில் இருந்தாலும் அவன் கடவுளுக்கு உரியவனே.

<u>இன்று ஆண்டு</u>
<u>சிவசமயம்</u>

| | |
|---|---|
| கலியுகம் | 5092 |
| சாலிவாக | 1913 |
| கொல்லம் | 1166 |

<u>முஸ்லீம் ஆண்டு</u> 1411
<u>கிறிஸ்து ஆண்டு</u> 1990

*வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்.*
– குறள்.

# வாழ்த்து

பைந்தமிழ் பரப்ப வந்த நாதமே
பயன் உள்ள கருத்துக்களை தந்த நாதமே
பலரை அறிமுகப் படுத்திய நாதமே
தடைகளை தாண்டி தவறாமல் வரும் தமிழ் நாதமே
உன் பணி தொடர என் வாழ்த்துக்கள்

பாபு, டாம்சற்

www.tamilarangam.net



# சமையல் குறிப்பு

## மட்டின் றோல்

தேவையான பொருட்கள்:-



ஆட்டிறச்சி - 1/2 கி.கிராம்.
உருளைக்கிழங்கு - 4
வெங்காயம் - 100 கிராம்
பச்சைமிளகாய் - 100 கிராம்
முட்டை - 3
கறிமிளகாய்த்தூள் - 3 கரண்டி
றஸ்க்தூள் - 100 கிராம்
கறிவேப்பிலை, பெருஞ்சீரகம், உப்பு
Spring Roll pastry

*செய்முறை:-*

ஆட்டிறைச்சியை முதலில் சிறிய துண்டுகளாக வெட்டி, கறிமிளகாய்த் தூளையும், வேண்டியளவு உப்பையும் இறைச்சியுடன் சேர்த்து பிரட்டி பிறம்பாக ஒரு பாத்திரத்தில் வைத்துக் கொள்ளவும். வெங்காயம், பச்சைமிளகாயை சிறிய சிறிய துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவும். அடுப்பில் பாத்திரம் ஒன்றில் எண்ணையை விட்டு கொதித்தபின் நறுக்கிய வெங்காயம், பச்சைமிளகாயைக் கொட்டி வதங்கியவுடன், பெருஞ்சீரகம், கருவேப்பிலையையும் சேர்த்துக் கிளறி ஓரிரு நிமிடத்தால் பிரட்டி வைத்த இறைச்சியையும் கொட்டி நன்றாகக் கிளறி மூடிவிடுதல் வேண்டும். கறி நன்றக இறுகிவந்தவுடன் இறக்கி ஒரு பாத்திரத்தில் கொட்டி ஆறவிடவேண்டும். பாத்திரம் ஒன்றில் உருளைக்கிழங்கை அவித்து தோலை நீக்கியபின் இறைச்சிக் கறியுடன் சேர்த்து பிசைந்து கொள்ளவும்.

Roll pastry யை ஒவ்வொன்றாகப் பிரித்தெடுத்து, அதில் கறியை வைத்துக் சுற்றி முட்டை வெள்ளைக்கருவால் ஒட்டி, முட்டையில் நனைத்து றஸ்க்தூலில் பிரட்டிக்கொண்டபின் கொதி எண்ணையில் பொரித்து எடுக்க வேண்டும். இச்சிற்றுண்டியை மாலைநேரத்தில் தேனீருடன் சாப்பிடும்போது மிகவும் சுவையாக இருக்கும்.

திருமதி. வாசுகி ஜெயபாலன், டோற்முண்ட்.

www.tamilarangam.net

# அந்த நெஞ்சங்கள்

இணுவையூர் இ.க.சோதி
பிராங்பேட்



சோகத்தின் வாசலில் தாண்டவமாடும் இதயத்தில் வருங்காலத்தில் மலரப்போகும் வாழ்க்கையை நினைத்து அவளது மனதில் ஏற்பட்ட பூரிப்பில், செந்தாமரை போல் சீதாவின் முகம் சிவந்திருந்தது. சின்னஞ் சிறு வயதில் தாயை இழந்து, தந்தையே கதியென தம்பிமார் துணையுடன் பொன் முடிச்சு அவளது கழுத்தில் ஏறும் நாள் நெருங்கி விட்டதென ஒரு மகிழ்ச்சி.

மாலையிடப் போகும் மாமன் மகன் மாயவனின் லீலைகள் புரிந்தும் புரியாதவள் போல், தனக்கு அவனே தெய்வமென நினைத்து, தாயில்லாத குறையே தனக்கு என்று நொந்து கொள்ளாமல் மாலையிடப்போகும் மன்னவனின் மனம் நோகாமல் அவனுக்கு துணைபோவேன் என்ற பூரிப்புடன் தரை நோக்கிய அன்னமென தளிர் கரந் தனிலே மலர் மாலையுடன் வலது கால் எடுத்து வைத்தாள் மணமேடையில் வேத மந்திரம் ஒலிக்க, கெட்டி மேளம் கொட்ட, பூமழை பொழிய, பெரியவர்கள் பத்தும்பதினாறும் என்று வாழ்த்தினார்கள்.

. வானத்தில் பூரண
சந்திரன் தன்னால் இயன்ற அள
ஒளியை பூமியை நோக்
பிரகாசித்துக்கொண்டிருந்தான். நாளிை
சென்றுவிட்டதென யன்னல் கதவுகளை
தாழிடும் பொருட்டு, யன்னலோரம்
சென்றபோது முழுமதி தன்னைவி
இவளல்லவா.... அழகாக இருக்கிறா
என்று வியந்தது. சீதாவின் முகத்தி
நாணமென்னும் ரேகையோ
யன்னல்கதவுகளை
தாழிட்டுக்கொண்டாள். அந்த இள
தம்பதிகளுக்கிடையில் அன்புமல
மலர்ந்தது.
நாளொரு மேனி பொழுதொ
வண்ணமென கருவறையில் ஓர் உய
வளரத் தொடங்கியது. வயிற்றி
வளரும் சிசுவின் பலாபலனோ அல்ல
பெற்றோர்களின் பலாபலனே
தெரியவில்லை அவர்களது குடும்பத்தி
சிறுசிறு பிரச்சனைகள் தலைதூக்
ஆரம்பித்துவிட்டது. சீதாவி
அப்பாவுக்கு இந்தத்திருமணத்தி
மனம் நிறையத் திருப்
ஏற்படவில்லையென்றாலும், சொந்தங்க

விட்டுப் போகக்கூடாதென்று எந்தத் திருமணத்திற்கு அவரது தங்கையின் வேண்டுகோளுக் கிணங்கி காணிமுதற் கொண்டு வேண்டியளவு நகையையும் சீதனமாகக் கொடுத் திருந்தும் மாயவனின் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் திருப்தி ஏற்படவில்லை.திரு மணத்தின் முன்பு தீர்த்துக்கொள்ள வேண்டிய பிரச்சனைகள் தாண்டப்பட்டதிற்கு காரணமாக, அவர்களது குடும்பத்தில் சீதா மூத்த பெண்பிள்ளையாக இருப்பதால் அவளுக்கே எல்லாச் சொத்துக்களும் வரவேண்டும் என்பது மாப்பிள்ளை வீட்டாரினது பிடிவாதம். ஆனால் மாயவனும் இரண்டு பக்கத்தின் நடுவில் என்னசெய்வதென்று தெரியாது தலையாட்டிப் பொம்மை போல் இரண்டு மாதங்கள் வரை காலத்தைக் கடத்தலானான்.

தாயின் பேச்சை நம்பி மாமனோடும் சீதாவோடும் வாக்குவாதம் ஏற்பட்டன. ''என்னங்க நாங்கள் திருமணமாகி இரண்டு மாதங்கள் ஆகிறது. ஆசையாக எப்போதாவது சினிமாவுக்குக் கூட்டிக்கொண்டு போனீர்களா?'' என்றவாறு விளக்கை அணைத்துக் கொள்ளும் பாவனையில் அவளது கண்கள் பார்த்தன. இதனை ஊகித்து புரிந்து கொண்ட அவன் 'ஏன் சீதா இப்பவே விளக்கை அணைக்கிறாய்.'' ''நேரம் இப்ப என்ன தறைவா... பத்துமணி ஆகிவிட்டது.'' அதனாலென்ன நாளைக்கு விடுமுறைதானே சிறிது நேரம் ாமதமாகத் தூங்க வேண்டியதுதானே. ம்.....ம்....ம்....,என்ன இன்று துப்பேச்சாக இருக்கிறது, என்ன வேணுமாக்கும் மாயக்கண்ணனுக்கு. ாமாகக் கேட்டால்தான் கொடுப்பீங்களாக்கும். ஒன்றுமே புரியவில்லை, விரமாகச் சொன்னால் கூடாதோ? சீதா சொன்னால்தான் புரிந்து கொள்ளுவீர்களோ? அவளது கையைப் பிடித்து இழுத்துக் கொண்ட அவனது பாவனையைப் புரிந்த அவள் 'இப்பவெல்லாம் நேரம் கெட்டுக்கிடக்கு. கொஞ்சம் பொறுங்களேன்.'' ''என்ன? சீதா நிச்சயமாகத்தான் சொல்லுகிறேன் உன்னுடன் முக்கிய கதை கதைக்கவேண்டும்.'' ''அப்படி என்ன முக்கியம் சொல்லுங்களேன்?: நானும்தான் கேட்போம் எனப் பக்கத்தில் உட்கார்ந்தாள். உனக்குச் சீதனமாக நாங்கள் கேட்டதை எல்லாம் கொடுத்தீர்கள் ஆனால் நான் நீங்கள் தராமல் விட்டதைக் கேட்கப்போகிறேன். ''என்ன சொல்லுங்களேன்'' றோட்டுக்கரைக் காணி அதாவது புளியடி வளவுக்காணியை எங்கப்ப கேட்கிறார் திரும்பவும் உனக்குச் சீதனமாகத் தான்.அதாவது வந்து....... மாமாவிடம் கேட்கின்றாயா? அவன் பேச்சுக்களை விழுங்கிக் கதைத்துக்கொண்டிருந்தான்.

இங்க பாருங்க முன்பு திருமணம் பேசும்போது உங்கப்பா, என் மாமனார் சீதனத்தைப் பற்றிப் பறவாயில்லை, சொந்தம் விட்டுப்போகக்கூடாது என்றுதான் வந்தவர் அதே நேரத்தில் எனக்கும் மனதுக்குள் விரும்பிக்கொண்ட நான் காதலை வெளியில் சொல்லாமல் இருந்த நேரந்தான் எமது திருமணப் பேச்சு வார்த்தை நடந்தபோது சந்தர்ப்பம் பார்த்து நானும் சம்மதித்தேன். இப்போது நீங்கள் பேசுவது சரியாக இல்லை. ''சீதா இதைக்கேளு நான் எனது அம்மா அப்பாவுக்காகக் கேட்கவில்லை, உனக்காகத்தான் கேட்கிறேன். அதோட நீ மூத்தபிள்ளை அவர்களுக்கு '' என்னத்துக்குச் சொத்து என்பது அவனது வாக்குவாதம். ''என் தம்பி இருவருக்கும் என்னைப்போல் சொத்தில் அவர்களுக்கும் உரிமைதானே. பாவம் அவர்களுக்கு என்று ஒரு குடும்பம் வரும்போது பாவங்கள்தானே, என்ன உங்களது பிடிவாதம்.'' அப்படி என்றால் நீ உன் தம்பிகளோடு இருக்கவேண்டியதுதானே..... அவளுக்கு பொத்தென்று அழுகை விம்மலுடன், விக்கி விக்கி அழுதாள். அவளது பரிதா பத்தைப் பார்த்து அவன் சமாதானம் சொல்லியும் அவளால் அடக்கமுடியவில்லை. அழுகையை அடக்கிக்கொண்டு கதையின் முடிவில் கடிகாரத்தைப் பார்த்தபோது காலைச்சூரியன் உதித்துவிட்டது என்பதைக் காட்டியது. சட்டென எழுந்து - அடுக்களை நாடிச்சென்ற அவளுக்கு எதிரில் சீதாவின் அப்பா வந்த பொழுது எல்லாவற்றையும் கொட்டித் தீர்த்தாள்.

www.tamilarangam.net

அந்த வார்த்தைகளை கேட்ட அவர் அடுத்த நிமிடம் ஜோசிக்காது மாயவனுடன் பேச்சுத்கொடுத்த நேரம் தடுமாறி வீட்டை விட்டுப்போ என்றதும் ஒரு காரணமாக இருந்தபடியால் சீதாவை மணந்து கொண்டவன் தனக்கு என்று ஒரு வழியை வகுத்துக் கொண்டு ஊரை விட்டு ஊர் மாறி பண்டாரவளை என்னும் இடத்தில் கடை ஒன்றில் வேலைக்குச் சேர்ந்தான்.

சீதாவின் மனதுக்குள் மாயவன் மனைக்கு வரவில்லையே என்ற கவலை ஒரு புறம், மறுபுறம் கருவறையில் கரு வளருகிறதே என்ற சந்தோஷம். யாரிடம் சொல்லுவாள் வேதனை அதனை. மாலை நேரம் வந்து விட்டால் அவளுக்குள் மௌனம் தென்னை ஓலைகளால் வேய்ந்த வீட்டுக் கூரையிலிருந்து மாரி மழை பெய்ய வடியும் நீர்போல் அவளது கண்களிலிருந்து வடியும் நீருக்கு அளவே இல்லை. யாரும் அவளைப் பார்த்துவிட்டால் கண்ணிரண்டை முந்தானையால் துடைத்துக் கொள்வதுபோல் பாசாங்கு செய்யும் அவளின் மன வேதனையை யாரால் துடைக்க முடியும். இரவோடு சேர்ந்து அழுதுகொள்ளும் *சீதா* பகலோடு சேர்ந்து சிரித்துக் கொண்டாலும் உள்ளத்தின் அழுகை ஒலி யாருக்கும் தெரியப்போவதில்லை.

நாட்கள் மாதங்களாகியது பத்தாவது மாதமும் நடந்துகொண்டிருந்த வேளை பிரசவ வேதனையில் துடித்தாள் அவளின் வெள்ளை மனதிற்கு ஆண் மகனைப் பெற்றெடுத்து இருந்தாலும், பிரசவ வேதனையை விட மனவேதனை அவளைப் பாதித்துவிட்டது போலும். இரு கரம் கூப்பி " ஆண்டவனே " இனி எனக்கு ஒரு குறையும் இல்லை என ஆண்டவனைப் பிராத்தித்தும் பெற்ற குழந்தையை தலைவனும் பார்க்க வேண்டும் என்றும் ஆசைப்பட்டாள். தலைவியின் ஆசை வீண்பொகவில்லை. அப்போதுதான் யாரோ ஒரு பெரியவர் சொன்னது ஞாபகத்துக்கு வந்தது. குடும்பத்தில் ஆயிரம் பிரச்சனைகள் இருந்தாலும், குழந்தை ஒன்று பெற்றுவிட்டால் எல்லோரும் ஒன்றாகிவிடுவார்கள் என்பது அவளது விருப்பப்படி மாயவனின் காதிற்குச் செய்தி எட்டியது. புன்னகையில் பூரித்தான், கோபம் தணிந்தது, இரவோடு இரவாக புகையிரதம் ஏறி பயணம் செய்துகொண்டிருக்கையில் எண்ணமெல்லாம் சின்னஞ் சிறு பாலகனின் வரும் காலத்தை எண்ணியபடி மறுநாள் காலை வீட்டை அடைந்தான்.

கதிரவனின் இளங்கதிர்கள் பூமாதேவியில் பட்டுத்தெறித்துக் கொண்டிருந்த வேளை கையில் சில பரிசுப் பொருட்களுடன் ஓடிவந்த அவனது கால்கள் வாசற் கதவைத் தாண்டியது. " *சீதா...... சீதா......* " என்றவாறு வந்தவனை வீட்டின் ஒரு மூலையில் இருந்து வந்த கடும் சொற்கள் நெஞ்சைச் சுட்டன. அவனும் எதிர் பார்க்கவில்லை போலும் . நாற்புறமும் பார்க்கின்றான். அந்த வார்த்தைக்கான ஆண் குரல் சாய்மனைக் கதிரையில் இருந்து கொண்டிருந்த *சீதாவின்* அப்பாவினுடையதே. அப்பாவின் கடும் சொற் கேட்ட *சீதா* கையில் குழந்தையுடன் "வேண்டாம் அப்பா வேண்டாம் அவரைப் பேசாதீர்கள். என்ன இருந்தாலும் அவர் என் கணவர் தானே " "உனக்கு ஒன்றும் தெரியாது நீ பேசாதே " அப்பா நான் பேசியிருந்தால் இவர் இவ்வளவுகாலமும் என்னைப் பிரிந்திருக்க மாட்டார். என்றவாறு கண்பாவனையில் மகனைக் காட்டினாள் மாயவனுக்கு ! *சீதா.......!* தொடர்ந்து நில் இவ்வளவு காலமும் வராமல் மனம் போன போக்கில் எங்கேயோ திரிந்து விட்டு சொந்தம் கொண்டாட வந்து விட்டான். குழந்தையைத் தொடவும் கூடாது, பார்க்கவும் கூடாது என்று கட்டளையிட்டார் *சீதாவின்* அப்பா கந்தையாபிள்ளை.

*சீதா*வுக்கும் மாயவனுக்கும் பிறந்த குழந்தையை ஏன் பார்க்கக்கூடது என்று கந்தையாபிள்ளை தடுக்கிறார், அவர் எண்ணவில்லை போலும். அந்தப் பச்சிளங் குழந்தையின் ஓடும் இரத்தம் அவர்களது என்று... அவனுக்கு வந்து விட்டது கோபம். இவ்வளவு தாரம்

www.tamilarangam.net

ஓடோடிவந்த மாயவனுக்குக் கிடைத்த பரிசு இது என்று எண்ணும்போது யாருக்குத்தான் சிரிப்பு வந்து விடாது. அந்தப் பெரியவரின் வார்த்தைகள் மாயவனைப் பொறுத்தவரையில் பொய்யானதே.

வீட்டின் நான்கு பக்கமும் அவனது கண்கள் பார்ப்பதைக்கண்ட யாவரினதும் மனதில் ஒரு அச்சத்தை உண்டாக்கியது. அங்கே அவனது கண்ணிற்குப் புலப்பட்ட கத்தியைச் சட்டென்று எடுத்து, யாரையோ அழித்துக்கொள்வதைப் போல் ஓங்கவே, சீதா கையில் இருந்த பச்சிளங் குழந்தையை ஒரு கையிலும் மறு கையால் அவனது காலைக் கட்டிப்பிடித்துக் கொண்டாள். " என்னங்க இது " ஐயோ வேண்டாம். சீதாவின் கண்களிலிருந்து கண்ணீர்த்துளிகள் அவனது பாதத்தை ஈரமாக்கின. ஆனால், அவளது தலையின் மேற்பகுதியை ஏதோ நனைப்பது போன்ற உணர்வு ஏற்பட்ட சிறிது வினாடிக்குள் இரத்தம் அவனது பாதத்தில் கண்ணீர்த்துளிகளுடன் ஒன்றாவதைக்கண்டு மேலே அண்ணார்ந்து பார்க்கின்றாள்.

மாயவன் வேறு யாருக்குமல்ல தனக்குத் தானே குத்திக்கொண்டது முட்டாள் தனமான செயலாக இருந்தபோதும் அவனைப் பொறுத்தமட்டில் சரியானதே. முதல் முதலாக தனக்குப் பிறந்த குழந்தையை அவன் பார்க்கமுடியாமல் மறைக்கும் போது அவனுக்கு ஆறுதல் சொல்ல யார் இருக்கின்றார்கள். இருப்பதெல்லாம் சீதாவும் மகனும் தானே. இரத்தம் சிந்தியதைக் கண்ட மாமன், மைத்துனர் திகைத்துப்போய் பல மாதங்களாக இருந்த கோபதாபங்கள் சச்சரவுகள் இவற்றுக்கு இரத்தத்தின்மேல் சமாதானம் கண்டனர். இது தேவைதானா? அந்த நெஞ்சங்கள் எப்பேர்ப்பட்டவை போலும். அவசரமாக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட மாயவனுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது. அவனது காயம் மாறிக்கொண்டாலும், ஞாபகார்த்தச் சின்னமான தளும்பு மாறவில்லை.

முற்றும்


---

# சங்கிலிப் பிணைப்பு

அல்லல் படும் நேரம் ஆண்டவனை நினைப்போம்
அயல் ஊரில் இருந்தால் நம் ஊரை நினைப்போம்
பசி என்று வந்தால் உணவினை நினைப்போம்
பணம் இருந்தால் பலரை அடக்க நினைப்போம்
படுக்கையில் இருக்கும் போது பட்டதை நினைப்போம்
உயிர் பிரியும் போது செய்த பாவத்தை நினைப்போம்
ஆகவே வாழ்க்கையில் நினைப்பென்பது
ஒரு சங்கிலிப்பிணைப்பு.

பாபு, டாம்சற்

www.tamilarangam.net



செல்வி.எஸ்.சி.ஊர்மிளா

# சிதைந்த உள்ளங்கள்

## தொடர்கதை....

அடுத்தநாள், பாபு எனக்குச் சம்மதம், ஆனால் துளசியையும் ஒரு வார்த்தை கேட்டுவிடு என்று கூறிவிட்டு அவனை நிமிர்ந்து பார்க்காமல் விடு விடு என்று வெளியே சென்றான். துளசி.... துளசி.... என்று அழைத்தவாறு துளசியின் அறையினுள் சென்றான் பாபு. என்ன அண்ணா என்றவாறு தான் படித்துக்கொண்டிருந்த கதைப் புத்தகத்தை மூடிவைத்தாள் துளசி. வந்து.... வந்து.... என்று இழுத்த பாபு தன் முகத்தில் கடுமையை வரவழைத்துக் கொண்டான். துளசி நான் (Foreign) பாரின் போகப்போகின்றேன். உன்னை அங்கு அழைத்துப் போகவும் முடியாது. தனியாக இங்கே நீ இருக்கவும் முடியாது. எனவே தயவு செய்து நான் சொல்கிறபடி நீ செய்வாயா? என்ன அண்ணா நீ சொல்கின்றாய். துளசி உன்மீது சுகு அன்பு வைத்திருக்கின்றான். நீயும் அவன்மீது அன்பு வைத்திருக் கின்றாய். நீயும் அவனால் நல்ல சந்தோஷமாக இருக்கின்றாய். அதனாலேதான் நான் இம்முடிவுக்கு வந்தனான். நீ மறுமணம் செய்து கொண்டு சுகமாக வாழ சுகு சம்மதித்துவிட்டான்.

''அண்ணா என்ன வார்த்தை சொன்னாய்? எனக்கா மறுமணம். திருமணம் முடித்து விதவையாகிய எனக்கு மறுமணமா? நடைப்பிணத்துக்கு மறுமணமா? உன்னால் என்னை வைத்துக் காப்பாற்றமுடியாவிட்டால் என்னைக் கொன்றுவிடு அண்ணா கொன்று விடு'' என்று கூறி விக்கி விக்கி அழுதாள் துளசி. ''நீ என்னை என்ன கொலைகாரன் என்று எண்ணிக்கொண்டாய் போலும். உன் நன்மைக்குத்தான் நான் சொல்கின்றேன். துளசி எனக்கு இவ்வாழ்க்கையே வெறுத்துவிட்டது. நான் (Happy) ஹப்பியாக காலம்கழிக்க எண்ணுகின்றேன், ஆனால் நீ இடையூறாக இருக்கின்றாய். என் சந்தோஷத்தை நீ குலைக்கின்றாய்.'' என்று ஈவு இரக்கமின்றி கூறினான் பாபு.

அண்ணா உன் சந்தோஷத்தை நான் குலைக்கவிரும்பவில்லை. உன் பெயருக்கு அகௌரவத்தையும் ஏற்படுத்த விரும்பவில்லை. நீ சொல்கிறபடி நடக்கவேண்டியது என் கடமை. நாதியில்லாத நான் உன்னை நம்பி வந்தேன். ஆனால் நீயோ சிதைந்து போன உள்ளத்துக்கு

www.tamilarangam.net

மறுமணத்தை செய்துவைத்து வேடிக்கை பார்க்கின்றாய். உன் விருப்பப்படி. ஆனால் ஒன்று இப்படி உனக்கு வாக்கு கொடுத்துவிட்டு நான் உயிர் விடமாட்டேன். நீ தற்போது எவ்வளவோ மாறி இருக்கின்றாய். உன் தங்கையாய் பிறந்த கடனுக்கு உன்னை திருத்தி விட்டுத்தான் இந்த ஜென்மம் இருக்கும். ஆமாம் இதை நினைவில் வைத்துக்கொள். அண்ணா. அண்ணா நீ சொல்கிறபடி செய்யப்போவது உயிரற்ற ஒரு பதுமைதான். உயிருள்ளதுளசி தினேஷ் இறந்த அன்றே இறந்து விட்டாள். ம்... என் முடிவைச் சொல்லிவிட்டேன். இனி நீ இங்கிருந்து போகலாம். (Please) பிளீஸ் என்னைக்கொஞ்சம் நிம்மதியாக இருக்கவிடு என்றவாறு தனது கட்டிலில் விழுந்து விக்கி விக்கி அழுதாள்.

துளசி சுகுணன் திருமணம் ஜாம் ஜாம் என நடந்தது. வேண்டா வெறுப்பாகத் தாலியைக்கட்டினான் சுகுணன். பாசம் என்ற நாலு எழுத்து சொல்லுக் காக கழுத்தை நீட்டினாள் துளசி. முதல் இரவு. அவளை அறைக்குள் தள்ளினர். கையில் பாலுடன் நுழைந்த துளசி சுகுணனை ஏறிட்டுப்பார்த்தாள். அவனோ தரையைப்பார்த்தவாறு இருந்தான். கட்டிலின் அருகே அளவுகணக்கற்ற சிகரெட் கட்டைகள் இருந்தன. அவன் தன் மனவெழுச்சிகளையும் உணர்ச்சிகளையும் அதன் மூலம் அடக்கிக்கொண்டான். கடமை என்ற எண்ணத்தை தலைமேல் கொண்டு ''இந்தாங்க பால் என்றுமுகத்தைத் திருப்பியவாறு பால் தம்ளரை நீட்டினாள் துளசி. யாருக் குவேணும் இந்த பால் கொண்டே குப்பையில் போடுங்கள் துளசி. என்றவாறு கட்டிலில் இருந்த தலையணையையும் பெட்சீட்டையும் எடுத்தவாறு ஒரு மூலைக்குள் சென்று படுத்தான் சுகு. பால் தம்ளரை அப்படியே வைத்துவிட்டு லைட்டை அணைத்துவிட்டு நிம்மதிப் பெருமூச்சை விட்டவாறு கட்டிலில் சரிந்தாள் அவள்.

நாள் ஆக ஆக சுகுணன் வெகுவாக மாறினான். பாபு இவ்விருவருக்கும் திருமணம் முடிந்த அடுத்த நாளே சென்று விட்டான். நல்லவனாய் இருந்த சுகுணன் குடியில் தனது துன்பத்தை மறக்கலானான். இதைக்கண்டு மனம் வெதும்பினாள் துளசி. தனது கணவனாக வந்துவிட்ட சுகுணன் தன்னாலேயே கெடுகின்றான் என்பதை எண்ணி எண்ணி வேதனைப் பட்டாள் அவள்.

விஸ்கி பாட்டிலை தன்முன்னே வைத்தவாறு அளவு கணக்கில்லாமல் மதுவை உண்டான் சுகுணன். துளசிக்கு பொறுக்கவே முடியவில்லை. எப்படியும் மறுமணம் செய்து கொண்டவள் அவள், மனைவிக்கு என்று சில கடமைகள் உண்டு. அவளுக்கு விருப்பமோ விருப்பம் இல்லையோ அக்கடமைகளை நிறைவேற்றத்தான் வேண்டும் என்பதை அவள் உணர்ந்திருந்தாள். நாள் ஆக ஆக அவள் தனது கடமைகளைச் செய்து வரலானாள். ஒரு நாள் அதிக போதை தலைக்கு ஏறிவிட்டதால் சுகு சுருண்டு விழுந்திருந்தான். பால்கணியில் போடப்பட்டிருந்த கதிரையில். துளசிக்கு மனம் கேட்கவில்லை. என்ன சுகு ஏன் இப்படிக்குடிக்கின்றீர்கள் அப்படி என்ன துன்பம் என்று கேட்டாள் துளசி. துளசி மன்னித்துக்கொள்ளுங்கள் அந்த நிலையிலும் அவன் நிதானம் தவறவில்லை. எனது துன்பத்தை மறக்க இதை நாடினேன். ''அப்படி என்ன துன்பம் உங்களுக்கு'' அதுவா, வேண்டா வெறுப்பாக உங்களைத் திருமணம் செய்து உங்கள் நிம்மதியை அழித்தேன். அது மட்டுமா, என் மனைவிக்கே நான் துரோகம் செய்து விட்டேன் துளசி என்றவாறு அழுதான் சுகு.

இன்றைக்குத்தான் அவன் அழுவதைப் பார்த்திருக்கின்றாள். அவளுக்கு விளங்கவில்லை. மனைவி என்றது தன்னையா? அல்லது.... துளசி நீங்கள் என்னை மணமாகாதவன் என்று எண்ணுகின்றீர்கள். ஆனால் நானோ

www.tamilarangam.net

எப்போதோ என்றைக்கோ மணமானவன். ஆனால் என் மனைவி என்னை விட்டு போய்விட்டாள். அமைதியை நாடி வந்தேன். கிடைக்கவில்லை. உங்கள் இன்பதுன்பங்களில் ஒரு நண்பனைப் போல பங்கு கொண்டேன். ஆனால் அதை தவறாக நினைத்தான் பாபு. மனம் உங்களை மணக்க விரும்பவில்லை. கடமை குறுக்கிட்டது. மணந்தேன். உங்களுக்கு நான் செய்த துன்பத்தை மறக்க நாடினேன் இந்த இனிய நண்பனை. நான் செய்தது பிழையா? சொல்லுங்கள் துளசி.... இல்லை இல்லை நீங்கள் செய்தது சரி என்று தழுதழுத்த குரலில் கூறினாள்,துளசி.

வருடங்கள் சிட்டாய் பறந்து சென்றன. விஸ்கி பாட்டிலோ அளவு கணக்கில்லாமல் காலியாகிக்கொண்டிருந்தன. மனமோ இன்பத்தில் லயிக்கவில்லை. ஐந்து வருடங்கள் சென்றன. பாரின் (Foreign)சென்ற பாபு தனது தங்கையின் வாழ்வை காணவந்தான். ஆமாம். அவன் முற்றிலும் மாறிவிட்டான். முன்பு இருந்த பாபு மாதிரியே இருந்தான். தன் தங்கைக்கு செய்த பாவத்தை எண்ணி எண்ணி மனம் வெதும்பினான். பாவம் துளசி.... அவனுக்கு தன் தங்கையைப் பார்த்து மன்னிப்பு கேட்கவேண்டியிருந்ததால் உடனேயே கிளம்பிவிட்டான்.

திடுமென வந்து நின்ற தன் தமயனைப் பார்த்து திடுக்குற்றாள் துளசி. என்ன அண்ணா சொல்லாமல் கொள்ளாமல் வந்து விட்டாயே. ம்.... என்றவாறு தங்கையை உற்றுப்பார்த்தான் அவன். முகத்தில் வெறுப்போ கோபமோ இல்லை. சந்தோஷ மாக இருந்தது. ஆனால் மனம். யாருக்குத்தெரியும். வேதனைப்பட்டுக்கொண்டிருக் கும். துளசி என்னை மன்னித்துவிடம்மா என்றவாறு தனது தங்கையின் கையைப் பற்றினான். என்னத்துக்கு உன்னை நான் மன்னிக்கணும். இல்லேம்மா.... உனக்கு விருப்பமில் லாத திருமணத்தை பண்ணி வைத்ததுக்குத்தான். அண்ணா நிறுத்து.... ஆரம்பத் தில் என்மனம் வெறுத்தது. ஆனால் சுகுணன் இருக்கும் நிலையைக்கண்டு கேட்டேன். அவர் எனக்காக தன் வாழ்வை பலியிட்டார். தான் மாட்டார் என்று சொன்னால், நீ வேறு யாருக்கும் என்னைக்கொடுத்துவிடுவாய். ஆனால் வருபவன் எப்படிப்பட்டவனோ என்று யாருக்கும் தெரியாது. அவனால் நான் கஸ்டப்படுவேனோ என்று பயந்து என்னை மணம் புரிந்தார். உன்னால் அவர் வாழ்க்கை தான் பாழாகிறது. என் வாழ்க்கையல்ல. நீ அவரிடம் போய் மன்னிப்புக்கேள். அவர் மன்னித்தால், நானும் உன்னை மன்னித்ததற்கு சமம். என்றவாறு தட தடவென மாடிப்படியை நோக்கிச் சென்றாள்.

அவளைப் பின்பற்றி சென்ற பாபு சுகுணனின் அறைக்குள் சென்றான். அங்கே அவன் கண்ட காட்சி. அவனால் தாங்கவே முடியவில்லை. கிளாசை ஒரு கையில் ஏந்தியவாறு தனது இருக்கையை விட்டு எழுந்த சுகுணன் ''வெல்கம் பாபு வெல்கம்'' ''டேக் யுவர் சீட்''என்றவாறு இருந்தான் கதிரையில். சுகு இது எல்லாம் என்னடா? இதுவா துன்பத்தை மறைக்கும் மருந்து. சீ.... சீ.... இதுவா மருந்து. டேய் சுகு என்னால் நீ கெட்டுவிட்டாய். என்னை மன்னித்துவிடடா. என்னத்துக்கு உன்னை நான் மன்னிக்கணும். உன் வாழ்க்கை நான் பாழடித்ததற்குத்தான். சுகு என்னை மன்னித்து விடடா. மன்னித்தேன் என்று சொல்லடா என்று, அவனது கரங்களைப் பிடித்தவாறு விக்கி விக்கி அழுதான் பாபு. மிஸ்டர் பாபு, மன்னிக்கவேண்டியது நானல்ல. துளசி. பாபு மன்னித்துவிடு என்று கூறுவது சுலபம். ஆனால் அதை உணர்ந்து செயலாற்றுவது கஸ்டம். அடிமனதில் எப்படியும் அந்த வேதனை இருக்கத்தான் செய்யும். இதோ துளசியும் வந்துவிட்டா. அவர்களிடம் நீ மன்னிப்பைக்கேள், அங்கு வந்த துளசியைப் பார்த்து கூறினான்.

இல்லை இல்லை நீங்கள் எனக்காக எனது அண்ணாவை மன்னித்தேன் என்று சொல்லுங்கள். பிளீஸ் (Please) என்று இரைஞ்சினாள் துளசி. ம்.... மன்னிக்க வேண்டிய அவசியம் இல்லை என்றாலும் உங்களுக்காக நான் பாபுவை மன்னித்தேன். சுகு எனக்கு ஒரு

உதவி அதை மாத்திரம் செய்து விட்டாய் என்றால் நான் இந்தப் பக்கமே தலை காட்டமாட்டேன் சுகு செய்வாயா? அவனைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது, சுகுணனுக்கு. என்ன செய்யனும்.... வந்து நீ விஸ்கி பாட்டிலை மறந்துவிடு. முடியாது பாபு முடியவே முடியாது. நீ செய்த உதவிக்காக துளசியை திருமணம் செய்யச்சொன்னாய் செய்தேன். இங்கேயே இருக்கச்சொன்னாய் இருந்தேன். கனடாவுக்குப் போகச்சொன்னாய் போனேன். எல்லாம் நீ சொன்னதுக்கு ஆமாப்போட்டேன். என்னை இந்த ஒரு விடயத்தில் மட்டும் கட்டாயப்படுத்தாதே பாபு கட்டாயப் படுத்தாதே.

ஓ.கே சுகு நான் உன்னை ஏசியிருந்தால் ஏதாவது தப்புச்செய்தால் மன்னித்துவிடு, துளசி உனக்கும் நான் தப்புச் செய்திருப்பேன், பல துன்பங்கள் கொடுத்திருப்பேன் அது எல்லாவற்றையும் மனதில் வைத்துக்கொள்ளாதே. சுகு, துளசி, நான் போறேன். காலம் வந்தால் மீண்டும் சந்திப்போம். என்றவாறு கண்களில் இருந்து கண்ணீர் ஆறாகப்பெருக தள்ளாடியவாறு நடந்தான் பாபு. ''டேய் பாபு நில்லடா'' டேய் போகாதே நில் நில் என்றவாறு அவனை நோக்கி எழும்பி ஓடிய சுகுணனை ஒரு கை மறித்தது. ஆம் துளசியேதான், கூப்பிடாதீர்கள் அவர் போகட்டும். அப்பதான் அவர் மனதுக்கு நிம்மதி கிடைக்கும், நீங்கள் போகாதீர்கள் என்று மறித்தாள் துளசி.

பாபு அந்த வீட்டை விட்டு காவி செய்து விட்டான். அது நடந்து இப்ப ஒரு கிழமை இருக்கும். இன்று கெளரிவிரதம். அதாவது சுமங்கலிகளுக்கு என்ற விரதம். தலையில் குளித்து புத்தாடை புனைந்து சுகுணனின் அறையை நோக்கிச் சென்றாள் துளசி. மேலே பார்த்துக்கொண்டிருந்த சுகுணனின் கால்களில் விழுந்தாள். ''துளசி, துளசி இது என்ன?'' என்றவாறு கதிரையை பின்னுக்கு தள்ளி விட்டு எழுந்தான் சுகுணன். என்னை ஆசீர்வதியுங்கள் (Please) ப்ளீஸ் ஆசீர்வதியுங்கள்..அவனால் அதை மறுக்கமுடியவில்லை. அவளதுகண்ணீர் அவனது பாதங்களை நனைத்தது. அதை அவனால் பொறுக்கவேமுடியவில்லை. துளசியின் தலையைத் தொட்டு நல்லாய் இருக்கனும் என்றான். அவனுக்கு அவ்வளவுதான் சொல்ல முடிந்தது. எழும்பினாள் துளசி.

தன் கணவனைப் பார்த்தாள். ஏதோ தீர்மானத்துக்கு வந்தவள் போல் அவனைப் பார்த்து நீங்கள் நான் சொல்வதைச் சற்றுக்கேழுங்கள். என்றவாறு தொடர்ந்தாள். சுகு நீங்கள் மனைவியை இழந்ததால் உங்கள் உள்ளம் சிதைந்தது. நான் என் கணவனை இழந்ததால் என் உள்ளம் சிதைந்தது. நீங்கள் கடமைக்காக என்னை. முடித்தீர்கள். நான் பாசத்துக்காக அதைச் செய்தேன். இந்த இரண்டு விடையத்திலும் இருவருடைய மனம், கருத்து, போக்கு எல்லாம் ஒற்றுமை. சுகு இதை நான் ஏன் சொல்கின்றேன் என்றால், ஒருவனுக்கு ஒருத்தி, ஒருத்திக்கு ஒருவன். ஆனால் மனம் சம்மதித்துவிட்டால், விசரனோ விதவையோ மறுமணம் செய்யலாம். எனக்காக உங்கள் வாழ்வைப் பலியிட்டீர்கள், நிம்மதியைக் குலைத்தீர்கள், அந்த தியாகத்துக்காக நான் என்னை உங்களுக்கு அர்ப்பணிக்கின்றேன். என்னை மன்னித்து விடுங்கள். நான் மணம் செய்து விதவையானவள்தான், தினேஷ்சைத் தவிர வேறு ஒருவரையும் நினைக்காதவள்தான். ஆனால் உங்கள் தியாகம் எல்லாத்திலும் பெரிது. சுகு பெரிது. எனவேதான் நான் உங்களை எனது கணவனாக ஏற்றுக்கொண்டுவிட்டேன். என்றாள் துளசி.

துளசி நீங்கள் இப்படி மாறினபோது நான் மாத்திரம் மாறாமல் இருப்பது அழகல்ல. எனவே உங்களை எனது மனைவியாக ஏற்றுக்கொள்கின்றேன். சிறிது நேரம் இருங்கள். சுகு இன்னுமா நீங்கள் ''ங்கள்'' போடுகின்றீர்கள். இல்லை துளசி, இருவரிடம் ஆசீர்வாதம் வாங்கவேணும். அதன் பின் ''ங்களை'' விட்டு விடுகின்றேன். என்றவாறு பாத்ரூமுக்குள் நுழைந்தான். அவளுக்குப் புரியவில்லை. என்றாலும் ஆவலை அடக்கிக்கொண்டு அவனுக்குத் தேவையான உடுப்பை எடுத்து வைத்தாள். குளித்து விட்டு

www.tamilarangam.net

வந்த அவன் இந்த பாண்டா வேண்டாம் என்றவாறு சூட்கேசைத் திறந்து பட்டு வேட்டியை எடுத்து உடுத்துக்கொண்டான். சரி வாங்க முதலில் நாம் முக்கியமான ஒருவரிடம் செல்லணும், என்றவாறு அவளை அழைத்துச்சென்றான். அங்கே தினேஷ்சின் படம், அவர்களை ஆசீர்வதிப்பது போல் பார்த்துச் சிரித்தான். இருவரும் அவனை வணங்கினார்கள். அப்படியானால் அக்காவிடம் மன்னிப்புக்கேட்கணுமோ. ஓ கட்டாயமாக, என்றவாறு தன் அறைக்குள் சென்று ஸ்டேலாவின் போட்டோவை எடுத்து வைத்தான். இருவரும் அவளை முறையோடு வணங்கினர்.
''துளசி இனி நாம் சாப்பிடலாமல்லவா?'' ஆமாம் அதைக்கட்டாயம் இப்போது செய்ய வேண்டும் என்றாள் துளசி. உணவு வயிற்றுக்குள் சென்றது. இதயம் எல்லாம் மகிழ்ச்சி வெள்ளத்தால் நிரம்பி நின்றது. விஸ்கி பாட்டில்கள் வெகு துரிதமாக மறைந்தன. துளசியின் இடம் மாறியது. சிங்கிள் பெட் டபிளாக மாறியது. மனம் மாறியது. உள்ளம் மாறியது. எல்லாமே மாறியது. ஆமாம், அந்த சிதைந்த உள்ளங்கள் இரண்டும் ஒன்றுக்கு ஒன்று உற்ற துணையாக மாறின. துளசியை சுகு ''ங்கள்'' போடுவதில்லை. ஒருமையிலே அழைக்கத்தொடங்கினான். அவர்களிடையே இருந்த திரை அறுந்து விலகியது. காலம் மாறியது போல மனங்களும் மாறின, என்பதற்கு அவ்விருவரும் உதாரணங்களாகத் திகழ்ந்தனர்.

அமைதியாக இருந்த அந்த பங்களா அல்லோலப்பட்டது. எந்நேரமும் அங்கு சிரிப்பு அலையைக் கேட்கலாம். அந்த இரண்டு சிதைந்த உள்ளங்களும் ஒன்று சேர்ந்து வாழ்க்கை என்னும் படகை வெகு கவனமாகவும், அமைதியுடனும், செலுத்திக் கொண்டிருந்தார்கள்.

முற்றும்.

—x—

## தவறுக்கு வருந்துகின்றோம்.

கடந்த 30.06.91 ஆம் திகதி பிராங்பேட் நகரில் மன்ற அங்கத்தவர்களின் திருமணமானவர்களுக்கும், இளைஞர்களுக்கும் இடையில் நடைபெற்ற கிரிக்கெற் போட்டியில் இளைஞரணி, திறம்பட விளையாடி மூன்று ஓட்டங்களால் திருமணமானவர்கள் அணியைத் தோற்கடித்திருந்தபோதும், தவறுதலாக எமது தமிழ் நாதம் இதழ் 6இல் திருமணமானவர்கள் அணி வென்றதாகப் பிரசுரித்துவிட்டோம். இது இளைஞர் அணியில் ஒரு கொந்தளிப்பை ஏற்படுத்தினாலும் எமது தவறினை மன்னித்து ஏற்றுக்கொண்டனர். இத்தவறினால் திருமணமானவர்கள் அணியிடமும் இளைஞர் அணியிடமும் மன்னிப்புக் கேட்டுக் கொள்வதுடன் வாசகர்களாகிய உங்களிடமும் மன்னிப்புக்கோருகின்றோம்.

www.tamilarangam.net

# கவிதை

ஆக்கம் பெருங்கவிக்கோ சேதுராமன்

வீறு கொள் தமிழர் வாழ்வும்
வினை முடியின் வாழ்வும்
மாறுகொள் வஞ்சர் வீழ்த்த
மனத்தெளிவான வாழ்வும்
பேறு கொள் பீடு வாழ்வும்
வெற்றிசேர் வாழ்வும், ஊக்கும்
ஆறுபோல் தமிழ்நா தம் ஆம்
அரும் பிராங்பேட் நாதம் என்பேன்.

பீடுறும் தமிழர் கண்டேன்
பிராங்பேட்டின் ஒற்றுமையாய்
நாடுறும் பணிகள் ஆற்றும்
நடைமணம் கண்டேன், விஞ்சும்
தேடு நல் செல்வம் தன்னைச்
செந்தமிழ் செழிக்க நல்கும்
நீடு செல் அன்பர் கண்டேன்
நீடுழி வாழ்க மாதோ!

தமிழ் நாதம் உலகம் உள்ளம்
தமிழர்கள் நாத மாகி
இமிழ்கடல் வையமெல்லாம்
இணைத்திடும் நாதம் செய்யும்
அமிழ்தம்போல் பெருக வேண்டும்
அஞ்சாமை துஞ்சாமை யால்
நமின் தமிழ் படைகள் வையம்
நடுவெற்றி பாடவேண்டும்

www.tamilarangam.net

# தமிழ் நாதம். தமிழ்மன்றம்.

சீராண்ட பரம்பரையின்
சிறீபதி தலைமை ஏற்க
பாராண்ட தமிழ் இனத்தின்
பரம்பரை உயர்வு ஓங்க
யாரார்க்கும் தாழ்சியாகும்
நாசங்கள் தொலைய என்னும்
வேராகும் ஆக்கம் செய்வீர்
வெற்றிமேல் வெற்றி சேற்பீர்!

ஜேர்மனி உயர்ந்த நாடு
ஜெகமெல்லாம் போற்றும்நாடு
கர்வங்கொள் பணிமுடிக்கும்
கடுமுழைப்பாலே வெல்லும்
அர்பணிக்கும் நம் ஓங்கும்
அடவேற்றின் அரிமா போன்ற
ஜேர்மனி தமிழின் நாதம்
சிறப்பாக ஒளிக்க வேண்டும்!

கதிரொளி போன்றும் ஓங்கும்
காலத்தின் வெள்ளம் போன்றும்
மதியொளி போன்றும் போற்றும்
மணம் வீசும் தோட்டம் போன்றும்
நதி செலல் போன்றும், இன்ப
நாதமாம் தமிழ்நா தம் தான்
விதி செய்ய வேண்டும் என்றும்
வெல்கவே தமிழ்மன்றம் தான்!

www.tamilarangam.net

# கவிதைகள்

## "அன்னை"




ஐயிரண்டு திங்கள்
அன்னையவள் மடியினிலே
சிறைவாசம் செய்து
நான் வெளிவந்த வேளையிலே
அன்பென்னும் பாலூட்டி
தன் நலம் கருதாமல்
கண்ணை இமை காப்பது போல்
காத்திருந்த காலமெல்லாம்
தாய் மொழி புகட்டியவளே
உன் கண்ணில் நீர் என்றால்
என் தோள்கள் துடிக்கின்றனவே
அன்னையே! உனக்கேன் கண்ணீர்
கவலை வேண்டாம் என் தமிழ்த்தாயே
என் உடன்பிறந்த நெஞ்சங்கள்
உனக்காக துடிக்கின்றனர்
நமக்கென்றொரு காலம்
வைகறைப் பொழுதினிலே கதிரவன் உதிக்கும்வேளை
உன் கொடி பறந்திடும் போது
உன் கண்ணீர் வற்றவில்லையானால்
நான் மீண்டும் சிறை வாசம் செல்வேன்
அன்னை உன் கண்ணீர் வற்றும் வரை.........

E.K.Sothy இணுவையூர்

www.tamilarangam.net

# வாழ்க்கை என்னும் நதியினிலே

மாரிமழைத் தூற்றலிலே
நனைந்துவிட்ட பனைமரத்துச்சிறகுகள்
என்னைவிட யாருமில்லை
என்ற வீராப்பில் – வாடையென்னும்
வஞ்சகக் காற்றுக் கிடைதனிலே
சிலமணிநேரம் போராடி
வீழ்ந்ததையா பாரினிலே(பூமியிலே)!


விழுந்துவிட்ட பாளைகளும்
பன்னாடைகளும்
காயவைத்து பதம்
செய்ய காலமெங்கே?
அவை அடுப்பங்கரை நாடிவந்து
தீப்பிடிக்க மறுக்கின்றனவே
வீட்டோரத்தில் முடங்கியிருக்கும்
சின்னஞ் சிறார்கள்–பசி
பொறுக்க மறுக்கின்றனவே!

என்ன செய்வாள் பாவியவள்
பாதிமுகம் புதைத்து, அடுப்புதனில்
ஊதும் வேளையிலே
வெளிக்கிளம்பும் முகிற்கூட்டம்
திக்குமுக்காட செய்கையிலே
இருமலில் ஊற்றெடுத்து
மலைச்சாரல் கன்னமென
பாய்ந்தனவே கண்ணீர்!

வறுமை என்னும் வற்றாத ஆற்றினிலே
வாழ்க்கை யென்னும் பாய்மரம்
கரைசேரும் காலம் எங்கே?
பிள்ளையொன்று இருந்துவிட்டால்
சீராட்டி தாலாட்ட பணமெங்கே
வேதனையிலும் வேதனை
பிள்ளையவள் குமரியென்றால்
மரண வேதனையிலும் வேதனை
அன்னையவள் நெஞ்சமதில்_______

இணுவையூர் சோதி
பிராங்பேட்

www.tamilarangam.net




பன்னாட்டு தமிழுறவு மன்ற அமைப்பாளர்
பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன்
M.A. D.Litt Ph.D



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெருங்கவிக்கோ தமிழ்மன்ற விஜயம்

பெருங்கவிக்கோ சேதுராமன் என்றால் நாம் ஒரு தடவை பாரதியையும், பாரதிதாசனையும் நினைவுகூராமல் இருந்துவிட முடியாது. தொட்ட பணி, விட்ட பணியை தொடரும் பெரும் பணியாக கவிதை நூல்கள் படைக்கும் பெருங்கவிக்கோ, கம்பீரத் தோற்றமும், மறத்தமிழனுக்கு உரித்தான நிமிர்ந்த நடையும், சிம்மக்குரலும், தமிழ் என்றாலே அழகு தமிழ் பேசும் திறமை பெற்றவர். கேட்போரின் காதுகள் இனிமைபட வாரிவழங்கும் வள்ளள். அவரின் சுயரூபமே தனித் தமிழால், சங்கத் தமிழால் வார்த்தெடுக்கப்பட்ட உருவம்; கூறப்போனால் இன்னும் பல!

பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் அவர்களின் தரிசனம் கிடைத்தாலே, நாம் பல வருடங்கள் பின் சென்று சங்கத் தமிழ் வளர்த்த மதுரைச் சங்கம் கண்ட உணர்வை பெற்றவர்களாகின்றோம்.

இந்தியத் தமிழ் மண்ணில் அவதரித்த பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் அவர்கள், தமிழ்ப் பெரும் புலவர் மட்டுமல்ல, தமிழ் உணர்வும், தமிழர் என்ற துடிப்பும் இறுமாப்பும் கொண்டவர். இவர், எங்கு தமிழன் வாழ்ந்தாலும் அவன் தமிழன் என்ற உணர்வில் அவனுக்கு இடுக்கண் வரும் போது கொந்தளித்து எழுந்து அவனுக்காக குரல் கொடுக்கும் மாவீரர். குறிப்பாக இலங்கைத் தமிழ்மக்கள் படும் அவலநிலை கண்டு குமுறி எழுந்தவர். இலங்கைத் தமிழ்மக்கள், இலங்கை இராணுவத்தினால் காட்டுமிராண்டித்தனமாக அழிக்கப்பட்டும், மானபங்கப்படுத்தப்பட்டும், பெண்கள் கற்பழிக்கப்பட்டும், சொல்லொணாத் துன்பங்களில் ஆழ்த்தப்பட்டபோதும் அன்று தொட்டு இன்று வரை குரல் கொடுத்து இலங்கைத் தமிழனுக்காக கண்ணீர் வடிக்கும் ஒரு ஜீவனாக திகழ்கின்றார். இந்திய இராணுவம், அமைதிகாக்கும் படை என்ற பெயரில் வந்து தமிழ் மக்களை அழித்தொழித்த நேரத்திலும் கூட இந்தியாவின் புத்திஜீவியாக தளிர்த்தெழுந்து இலங்கைத் தமிழர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை கண்டித்துக் குரலெழுப்பியவர். 1990ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசிய ஒரு பிரமுகர், இலங்கை இராணுவம் அங்கு பெண்களை கற்பழிக்கின்றார்கள்; ஆதலால் இந்திய இராணுவம் அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்க சென்றிருக்கின்றது என்று பொருள்படக் கூறிய மாத்திரத்தில் கூட்ட பார்வையாளர் மத்தியில் வீற்றிருந்த சிங்கத்தமிழன் வா.மு.சேதுராமன் அவர்கள் குமுறியெழுந்து, கண்கள் சிவக்க, வாய்விதும்ப ''அங்கே அமைதி காக்க என்று சென்ற இந்திய இராணுவத்தினர் என்ன செய்கின்றார்கள்? இலங்கை இராணுவம் என்ன செய்ததோ அதே வேலையைத்தான் அவர்களும் செய்கின்றார்கள்'' என்றார். அந்த மாத்திரத்தில் கூட்டத்தின் ஆதரவாளர்கள் அவரைக் கடுமையாகத் தாக்கி அவரது கையை உடைத்தார்கள். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு நீண்ட நாட்கள் சிகிச்சை பெற்றார். அந்த வேளையிலும் மருத்துவமனையில் இருந்துகொண்டே இலங்கைத் தமிழனுக்காக தான் உயிர் கொடுக்கவும் தயார் என்று பத்திரிகைகளுக்கு பேட்டிகள் அளித்தார். தமிழன் என்ற உயிர் துடிப்புடன் தமிழ் வளர்க்க கவிதை ஆக்கத்தில் கரை புரண்டோடும் கவித்திறனும் அவரது உயிர் நடியாகும்.

தொடர்ச்சி 30ஆம் பக்கம்....

www.tamilarangam.net

# மனித உரிமைகளும் மீறல்களும்.

## அகதிகள் பிரச்சனை பற்றிய ஓர் ஆய்வு.

தனிமனிதனுடைய உரிமைகள் பறிக்கப்பட்டால் அல்லது இனிமேல் அவை மறுக்கப்படலாம் என்ற பய உணர்வு தோன்றினால் மனிதர்கள் தங்கள் தாய்நாட்டை விட்டு வெளியேறி வேறுநாடுகளில் அகதிகளாகத் தஞ்சம் கோரும் நிலை தோன்றுகின்றது. இத்தகைய கோணத்தில் நோக்கும்போது உலகம் முழுவதும் பரந்து காணப்படும் அகதிகளும் மனித உரிமை அல்லது மனித உரிமை மீறல்கள் ஆகிய நிகழ்வுகளும் ஒன்றோடு ஒன்று சார்ந்துதான் உருவாகின்றன. அதேவேளையில் வேறு ஓர்நாட்டில் தஞ்சமடைந்த அகதிகளின் உரிமைகள் அந்நாட்டில் காப்பாற்றப்படுகின்றனவா என்றால் இவ்வினா பெரும் சர்ச்சைக்குரியது. உலகம் முழுவதும் பரந்து காணப்படும் அகதிகள் அல்லது தஞ்சம்கோருபவர்களின் நலன்களைப் பேணுவதற்காகத் தோற்றுவிக்கப்பட்ட ஐக்கியநாடுகள் அகதிகள் உயர் தாதுவராலயம் (UNHCR) உலகம் முழுவதுமே இது ஓர் பாரிய பிரச்சனையாக உருவாகிவருவதாகக் கருத்துத் தெரிவிக்கின்றது. சமீபகாலங்களில் பல மேலைத்தேயநாடுகளில் இயற்றப்பட்டுவரும் சட்டங்களும் சட்டச்சீர்திருத்தங்களும் அந்நாடுகளில் தஞ்சம் கோரியிருப்பவர்களின் நலன்களுக்குப்பெரும் மிரட்டலாகவும் குந்தகம் விளைவிப்பவையாகவும் அமைந்திருக்கின்றன என்பது பரவலான ஓர் கருத்து.

மனித உரிமைகள் மதிக்கப்படவேண்டும், அவை வரையறுக்கப்படவேண்டும் என்ற உணர்வும் கோரிக்கையும் உலகம் முழுவதுமே தோன்றியிருந்தாலும், பிரான்ஸில் ஏற்பட்ட கலாச்சாரப்புரட்சிதான் மனித உரிமைகளின் முக்கியத்துவத்தை நிலை நாட்டியது. 1789 ஆம் ஆண்டு ஆவணிமாதம் 26 ஆம்திகதி ஓர் மனிதனுடையதும் ஓர் பிரஜையுடையதுமான அடிப்படை உரிமைகள் (Rights of man and the citizen) என்ற ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.இவ்வடிப்படைதான் மனித உரிமைகள் என்ற கோட்பாட்டைத்தோற்றுவித்தது. இற்றைக்கு 200 வருடங்களாக நாம் மனித உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும் நாம் நாகரீக உலகத்தில் வாழ்கின்றோம் 20 ஆம் நூற்றாண்டின் கடைசிக் காலகட்டங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்று சொல்லிக்கொண்டாலும், உலகம் முழுவதிலும் ஒருகோடியே முப்பது இலட்சத்திற்கு மேற்பட்ட பிரஜைகள் தங்கள் உரிமைகள் மறுக்கப்பட்டு சொந்தநாட்டிலோ அல்லது பிறநாடுகளிலோ அகதிகளாக்கப்பட்டு இன்னும் தங்கள் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்த வண்ணம் இருக்கிறார்கள். எத்தனையோ சர்வதேச அமைப்புகள் இவர்களது குரலுக்கு செவிசாய்த்தாலும், இவ்வகதிகள் வாழுகின்ற ஒவ்வொருநாடும் தங்களுடைய தன்னாதிக்கத்தை காப்பாற்றிக்கொள்ளவென உருவாக்குகின்ற சட்டங்கள் பலசமயங்களில் இத்தஞ்சம்கோரும் மக்களின் உரிமை மறுப்புகளாக அமைந்துவிடுகின்றன.

இன்று பரவலாக எல்லாநாடுகளிலும் காணப்படுகின்ற அகதிகள் சட்டங்கள் பிரெஞ்சுப்புரட்சியின்போது வரையறுக்கப்பட்ட அடிப்படைகளில் இருந்து மேம்படுத்தப்பட்ட வடிவங்கள்தான். பிரான்ஸில் உருவாக்கப்பட்ட அடிப்படை உரிமைகள் பற்றிய கோப்பு இரண்டாம் உலகப்போரின் பின்விளைவுகளால் புதிய தேவைகளுக்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சூழ்நிலைகளுக்கும்மேற்ப மாற்றங்களைப்பெற்றது.
இதன்போதுதான் சர்வதேச மனித உரிமைகள் பற்றிய கோட்பாடுகளும், அதன் கூறுகளும் நிகழ்கால உலகிற்காகப் புதுவடிவம்பெற்றதோடு மனித உரிமைகள் பாதுகாப்பிற்காகவும், அகதிகள் பிரச்சனைக்கு ஓர் தீர்வைத்தேடும் முகமாகவும், பல புதிய அமைப்புகள் தோற்றுவிக்கப்பட்டதோடு புதிய தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. 1948 ஆம் ஆண்டின் அனைத்துலக மனித உரிமைகள் பிரேரனை,1950 ஆம் ஆண்டின் ஐக்கியநாடுகள் பொதுச்சபையின் ஐக்கியநாடுகள் அகதிகள் உயர் தூதுவராலயம் (UNHCR) தோற்றுவிப்பதற்கான தீர்மானம், 1951 ஆம் ஆண்டின் அகதிகள் நிலைப்பாடுபற்றிய வரையறை ஆகியவை தோற்றுவிக்கப்பட்டன. இவை அனைத்தினதினதும் அடிப்படைத்தொனி ஒவ்வொருமனிதனுடைய அடிப்படை உரிமைகளையும் கௌரவத்தையும் பேணுவதும் பாதுகாப்பதும் ஆகும்.

ஆயிரத்துத்தொள்ளாயிரத்து எண்பதுகளில், அகதிகளின் உரிமைகள் பாதுகாப்புக்கான சட்டதிட்டங்களுக்கும், அகதிகள் பிரச்சனைக்கும் முக்கியத்துவம் கொடுத்த பல நாடுகள் பல இறுக்கமான நடைமுறைகளைக் கையாளத்தலைப்பட்டு, தஞ்சம் கோருவோருக்குப் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தின. அகதிகள் மனித உரிமைகள் சட்டங்கள் முன்பு ஏற்றுக்கொள்ளப்பட்டபடி சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்டிருந்தாலும் பல நாடுகள் தங்களுக்கு ஏற்றவாறு அதேசட்டங்களுக்குரிய சார்பான விளக்கங்களை வழங்கத்தலைப்பட்டன. இப்பாதகமான விளக்கங்களால் பல பிரச்சனைகளை, தஞ்சம் கோருவோர் சந்திக்க நேர்கிறது. தஞ்சம்கோரும் ஒருவருடைய உண்மை நிலையைத்தீர்மானிப்பதற்காக நடைமுறைப்படுத்தப்படும் ''துரித விசாரணை'' முறை பெரும்பாலும் பாதகமான தீர்வுகளிலே முடிவுற்றன.

சமீபகாலங்களில் தஞ்சம்கோருவோரின் வழக்குகளில் நியாயமான அதேவேளையில் நடைமுறைச்சிக்கல்கள் குறைந்த முடிவுகளை எடுப்பதற்காக கைக்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் அடிப்படைப்பாதுகாப்பிற்கும், மனித உரிமைக்கோட்பாடுகளுக்கும் குந்தகமான விளைவுகளை ஏற்படுத்தின. எல்லா நாட்டு அரசாங்கங்களும் பொதுவாக தங்கள் நாடுகளின் எல்லைகளுக்குள் வந்துசேரும் தஞ்சம் கோருவோரைப்பற்றிய போதிய தகவல்களைப் பெற்றுகொள்ள விளைகின்றன. இதற்கு முக்கியகாரணமாக அமைந்திருப்பது தஞ்சம் கோருவோரில் கணிசமானவர்கள் மனித உரிமை மீறல்களுக்கு ஆளாகாதவர்கள் அதேவேளையில் தங்கள் நாடுகளில் கைதுசெய்யப்பட்டு தண்டனைக்கு உள்ளாகக்கூடும் என்ற நியாயமான பயத்தின் காரணமாக இன்னொரு நாட்டின் எல்லைகளுள் வந்துசேருபவர்கள் பல நாடுககள் இத்தகைய நிகழ்வுகளைக்காரணம் காட்டி இது அகதிகள் தஞ்சம் கோருவதற்குமுற்றிலும் மாறுபட்டதாகக் கருதப்படவேண்டியது என்றும் இத்தகைய நிகழ்வுகளைத் தடுப்பதற்காக தங்கள் சட்டதிட்டங்களை சீரமைக்கவேண்டிய தேவையிருப்பதாகவும் சொல்லிவருகின்றன. இத்தகைய அணுகுமுறை மனித உரிமைகளைக்கருத்திற் கொள்வதைவிட குடிவரவு சார்பான சட்டதிட்டங்களுக்கூடாக நோக்கப்படுவதால் நியாயமான தஞ்சம் கோரும் பல அகதிகள் பாதிக்கப்படுவது தடுக்கமுடியாத ஒன்றாகிவிட்டது.
துரிதவிசாரணைகளாலும், குடிவரவு சட்டங்களுக்காகவும் எடுக்கப்படக்கூடிய ஒரு தவறான முடிவு ஒரு தனிநபரைப்பொறுத்தவரையில் மிகமிகமோசமான பின்விளைவுகளை ஏற்படுத்துவது தவிர்க்கமுடியாததாகிவிடுகிறது.

***

சஞ்சயன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிறுவர் பூங்கா

சில்லென்ற வாடைக்காற்றினிலே
தேன் சுவைக்கும் கீதம் ஒன்று
என் காதோரம் கேட்கின்றது
மனதோடுபாடி மகிழ்கின்றது
அதுவே தமிழோசை இனிய தமிழோசை

விழியால் மீட்டும் கீதம்
இதழ்கள் அசைக்கும் கானம்
கால்கள் போடும் தாளம்
செவியில் இனிக்கும் ராகம்
அதுவே தமிழோசை இனிய தமிழோசை

தாமரை இலையின் மேலே
தாண்டவம் ஆடும் நீரே
அலையென்ற பெயரால் கடலே
இசைத்திடும் கானம் தனியே
அதுவே தமிழோசை இனிய தமிழோசை

காலத்தால் பழைய கவியே
கவி கொண்டு சிரித்த நிலவே
இமைக்கின்ற பொழுதில் இனிதாய் பேசும் மலரே
கவை கொண்டு பாடும் கதிரே
அதுவே தமிழோசை இனிய தமிழோசை

பூக்களில் பன்னீர் துளிகள்
புற்களின் மேனியில்படவே
உயிர் கொண்டு எழுந்த வண்டினங்கள்
பூக்களில் பாடும் சுவைதான்
அதுவே தமிழோசை இனிய தமிழோசை


**ரவிசங்கர், பிராங்பேட்.**





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அக்கரைப் பச்சைகள் (உருவகம்)

பொற்பதி வீதி,

கொக்குவில்,

15.2.90.

அன்புள்ள தேவகி அறிவது,

நாங்கள் நலம், அதுபோல் உங்கள் நலத்திற்கும் இறைவன் அருள் புரிவானாக.

உனது கடிதத்தைப் பல நாட்களாக எதிர்பார்த்திருந்து ஏமாற்றத்தில் மீண்டும் நானே எழுதுகிறேன். வெளிநாடுகளில் எல்லோரும் பிஸி என்பதை அறிவேன்.

இங்கு பிரச்சனைகள் குறைந்து யாழ்ப்பாணம் பழைய களை கட்டி விட்டது. அதனால் ஓரளவு நிம்மதியாக வாழ்கிறோம். பிரதீப், காயத்திரி ஒழுங்காகப் பாடசாலை போய் வருகிறார்கள். இவரும் வழக்கம் போல் பாடசாலை போய் வருகிறார். உப அதிபர் பதவியும் கிடைத்திருக்கிறது. எல்லாம் நல்லபடியாக நடந்து கொண்டிருந்தாலும் எனக்கு இந்த வாழ்க்கை அலுத்துவிட்டது.

தேவகி! நீ என் உற்ற தோழி என்பதால் உனக்கு என் மன நிலை புரியும். பள்ளி நாட்களிலேயே நான் அடிக்கடி சொல்வேன், வெளிநாடு போவதுதான் என் லட்சியமென்று. நீ கூடச் சொல்வாய், கஞ்சி குடிக்க நேர்ந்தாலும் இந்த ஊரிலே தான் இருக்கப்போவதாக. எங்கள் விதி வேறு விதமாய் அமைந்து விட்டது.

இவருக்கு நல்ல பதவி, மதிப்பு இருப்பது உண்மைதான். சம்பளம் தவிர ரியூஷன் வகுப்புகளில் எக்கச்சக்கமாகக் கிடைகிறது. இருந்தும் என்ன, செலவுகள் அதற்கு மேல் பிள்ளைகளின் படிப்பு, பாடசாலை போவதற்க்குப் பிரத்தியேக மினிபஸ், அவர்களின் ரியூஷன் செலவு, இவைதவிர மாமா, மாமியின் மருந்துச்செலவு.... இப்படியே நீட்டிக்கொண்டு போகலாம். இங்கு எவ்வளவு தான் உழைத்தாலும் சேமிக்க முடியாது. வெளிநாடுகளில் எல்லோரும் எத்தனையோ வேலைகள் செய்து எவ்வளவு உல்லாசமாக வாழ்கிறார்கள் என்று நான் கேள்விப்பட்டு இருக்கிறேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தேவகி! நீ கொடுத்து வைத்தவள். நீயும், கணவனும், மகனுந்தான் வீட்டில். உங்களைத் தட்டிக் கேட்க யாருமில்லை. எங்கள் வீட்டில் மாமனார் மாமியாருடன் நான் அனுபவிக்கும் வேதனைகளை யாரிடம் சொல்வது? ஒவ்வொரு விஷயத்திலும் தலையிட்டுக் கொண்டிருப்பார்கள். இந்த சேலைக்கேன் இவ்வளவு விலை கொடுத்தாய்? வெள்ளிக்கிழமை நகம் வெட்டாதே, தலை விரித்து நில்லதே, புருஷனுக்கு வாய் காட்டாதே..... இப்படி ஒரே தொண தொணப்பு. அலுத்துப் போய் சில வேளைகளில் அம்மாவுடன் போய் நின்றால் அம்மாவும் இதே பாணியில் புத்திமதிகள். அப்பப்பா.... வயது போனவர்களுடன் சீவிப்பதென்றால் எத்தனை கஷ்டமென்று அனுபவித்துப் பார்த்தால்தான் தெரியும்.

இவைதான் போகட்டும், இங்கு சந்தோஷமாகச் சுற்றிப் பார்த்து அனுபவிக்க என்னதான் இருக்கிறது? கீரிமலையும் கஷீர்ணா பீச்சும் அலுத்து விட்டது. மலை நாட்டுப் பக்கம் போய் வருவதென்றால் இவர் ரியூஷன் வகுப்புகளைச் சாட்டி வர மாட்டார். பட்டதாரி ஆசிரியர்கள் எல்லோரும் கனடா, நைஜீரியா, அவுஸ்திரேலியா என்று போய் இப்ப இரண்டு வருடமும் ஆகவில்லை. அதற்குள் அவர்களின் வெறுங்காணிக்குள் ஒரு மாடி வீடு கட்டிக் குடிபுகுந்தும் விட்டார்கள். எங்களுக்குப் படிப்பித்த ராஜரட்ணம் மாஸ்ரர் நைஜீரியா போய் உழைத்துத் தன் இரண்டு பிள்ளைகளையும் நல்ல சீதனத்துடன் கரை சேர்த்து விட்டார். இவையொன்றும் இவரது கண்ணுக்குப்படவில்லையே என்பதுதான் என் கவலை.

சரி தேவகி, என் குறைகளைச் சொல்லி கொண்டு போனால் உனக்கு போரடிக்கும். நீங்கள் எப்ப இலங்கைக்கு வரவிருக்கிறீர்கள்? உன் அம்மாவும் அடிக்கடி சொல்கிறா, தன் பேரனைப் பார்த்த பின் கண்ணை மூடினாலும் பரவாயில்லையென்று. குமாரண்ணாவைச் சுகம் விசாரித்ததாக சொல். தீபன் எப்படியிருக்கிறார்? குழப்படியில்லையா? தீபனுக்கு என் அன்பு முத்தங்கள். இக்கடிதம் கிடைத்தவுடனாவது பதில் போடுவாய் என்று நினைக்கிறேன்.

என்றும் அன்பு மறவாத

பாமினி.

Bergerstr 405,

Frankfurt 1,

Germany,

10.4.90.

அன்புத் தோழி பாமினிக்கு,

நாங்கள் நற்சுகமுடையோம். அதுபோல் நீங்களும் சுகமாயிருபீர்களென்று எதிர்பார்க்கின்றென்.

உன் கடிதம் கிடைத்து இரண்டு மாதமாகிறது; நேரமின்மையால் பதில் எழுதத் தாமதமாகி விட்டது. நானும் வேலைக்குப் போகத் தொடங்கியதுதான் நேரமின்மைக்குக் காரணம். நங்கள் ஒரு வீடு (அப்பார்ட்மெண்ட்) வாங்கியிருக்கின்றோம். இரண்டரை வட்சம் DM. ஒரு குறைந்த தொகை முதலீடு போட்டுத்தான் எடுத்தோம். இனி ஒவ்வொரு மாதமும் இரண்டாயிரம் DM ஆகக்கட்ட வேண்டும். வட்டி கட்டிக் கொண்டு போகவே எங்கள் வாழ் நாள் முடிந்து விடக்கூடும். இங்கு வாடகைக்கு வீடு எடுப்பதும் கஷ்டந்தான். நானும் உழைத்தால்தான் ஓரளவுக்குச் சமாளிக்கக் கூடியதாக இருக்கும். இவ்வளவு காசைக்கட்டி வீட்டைச் சொந்தமாக்கியுமென்ன, எங்களூர் வீடுகளைப் போல் பிள்ளைகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விளையாட ஒரு முற்றமில்லை, விருந்தினர் வந்தால் தங்க அறைகளுமில்லை. இங்கு ஒவ்வொருவரின் நிலையும் இதுதான்.

தீபன் ஓரளவு கதைக்க ஆரம்பித்திருக்கிறான். குழப்படி கூடினாலும் ஒரே கலகலப்புத்தான். நான் வேலைக்குப் போகும் நேரங்களில் குழந்தைகள் பராமரிப்பு நிலையத்தில் (இங்கு Kinder Kripe என்று சொல்வார்கள்) விட்டுச் செல்வேன். தீபனுக்கு அங்கு போய் வர விருப்பமென்றாலும் என் மனதில் ஒரு கவலை.... ஒரு பயம்..... எங்கள் மீது அவனுக்கிருக்கும் பாசம் குறைந்து விடுமோவென்று.

பாமினி! நீ கொடுத்து வைத்தவள்; உன் பிள்ளைகள் அதிஷ்டசாலிகள். உனக்கு உதவிக்கோ, புத்திமதிகள் சொல்லவோ பெரியவர்கள் இருக்கிறார்கள். பிள்ளைகளைக் கொஞ்சி விளையாட அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா இன்னும் அயலவர்கள் என்று எத்தனை பேர். என்னைப் பொறுத்தவரை இப்படி ஒருவராவது வீட்டிலிருந்தால் எவ்வளவு உதவியாக இருக்கும். நானும் அப்பா, அம்மாவுக்கு எழுதிக் கொண்டுதான் வருகிறேன், இங்கு வரும்படி. அவர்களும் ஏதோ ஒரு சாட்டுச் சொல்லித் தட்டிக் கழித்து வருகிறர்கள்.

ஏதோ இங்கு நிறைய உழைக்கிறோம்; வசதியாக வாழ்கிறோம். இருந்தும் மனதின் ஒரு மூலையில் ஒரு சிறு ஏக்கம் நிரந்தரமாகிவிட்டது. அது, எங்கள் மண்ணில் என்று போய் வாழ்வோம்? என்பதுதான். இங்கு கோடையில் (Summer) எல்லோரும் உற்சாகமாக நண்பர், உறவினர் வீடுகளுக்குச் செல்வதும் சுற்றுலாப் போவதுமாகக் கொண்டாட்டந்தான். குளிர்காலம் (Winter) தொடங்கிவிட்டாலோ, வானத்தில் பரவி இருக்கும் இருள் ஒவ்வொருவரின் மனதிலும் சூழ்ந்து ஒரு வித சோகம் குடிபுகுந்து விடும். இப்படியான நேரங்களில் சொந்த நாட்டை நினைத்துப்பார்த்தால் அது சொர்க்கந்தானே!

நான் எனது கஷ்டங்களையே எழுதிக் கொண்டிருக்கிறேன். உன் பொழுது எப்படி போகிறது? பிரதீப், காயத்திரி எப்படியிருக்கிறார்கள்? அங்கு பிரச்சனைகள் குறைந்திருப்பது, எங்களுக்கும் நிம்மதி; அல்லது அது வேறு யோசனை. உன் மாமா, மாமி, அம்மா, கணவர் யாவரையும் சுகம் விசாரித்ததாகச் சொல். மிகுதி அடுத்த கடிதத்தில். உன் பதிலை ஆவலுடன் எதிர்பார்த்திருப்பேன்.

அன்புடன்,

தேவகி.

எழுதியவர்:- சகி, பிராங்பேட்.

*அடுத்து வரும்*
*எமது தமிழ்நாத வெளியீடு*
*முதலாவது ஆண்டு சிறப்புமலராக*
*வெளிவரவிருக்கிறது.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கலைக்கண் வீடியோவிற்கு தமிழ்மன்றம் நன்றி நவில்கின்றது



கலைக்கண் வீடியோ நிறுவனத்தின் கன்னிப்படைப்பின் வெளியீட்டு விழா 24.8.91 அன்று தமிழ்மன்ற கலைநிகழ்ச்சியின் போது நடாத்தப்பட்டு மகத்தான சாதனை படைத்து தமிழ்மக்களின் வரவேற்பைப் பெற்றது. அன்றைய தினமே இருநூறு பத்திரிகைகளுக்கு மேல் விற்பனையாகியதுடன், அன்பளிப்புகளும் வழங்கப்பட்டன. கன்னிப்படைப்பின் முதற்பிரதியை திரு பாலேந்திரன் தம்பதிகள் பெற்று 501,– மார்க்கை அன்பளிப்பாக வழங்கி தமிழ்மன்றதிற்கும், கலைக்கண் வீடியோ நிறுவனத்திற்கும் ஊக்கமும் ஆக்கமும் காட்டினார்கள். கலைக்கண் வீடியோ நிறுவனத்தினர் காட்டி நிற்கும் சாதனை ஜேர்மன் வாழ் தமிழ் மக்களிடம் மட்டுமல்லாது, வேறு பல நாடுகளிலும் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

வெளியீட்டு விழாவின் போது பார்வையாளர்கள் வியக்கும் அளவிற்கு, பத்திரிகைக்கு நிகழ்ச்சியைத் தயாரித்து வழங்கிய ஆசிரியர்களுக்கும், பங்கு பற்றிய சிறுவர்களுக்கும், கலைக்கண் வீடியோ நிறுவனத்தினர் பரிசில்கள் வழங்கினர். பத்திரிகையின் ஒரு பகுதியை தாங்கி நிற்கும் சுதந்திரதாகம் எனும் இசையும் கதையும் நிகழ்ச்சியில் பங்குகொண்ட அனைவருக்கும் ''சுதந்திரதாகம்'' எனும் வாசகம் பதித்த கேடயம் வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட, கலைவிளக்குப் பத்திரிகை ஆசிரியர் திரு பாக்கியநாதன் தம்பதிகள் பரிசில்களை வழங்கினர். இங்கே சிறப்புப் பேச்சாளராக, பீஸ் நகரத்திலிருந்து வருகை தந்த திரு பாக்கியராஜா அவர்களும் வீடியோ பத்திரிகையின் மகத்தான படைப்புப் பற்றியும், நிகழ்ச்சிகளின் சிறப்புப் பற்றியும் பாராட்டிப் பேசினார். இக்கலைக்கண் வீடியோ பத்திரிகை நிறுவனத்தினர் தமது கன்னிப்படைப்பினை தமிழ்மன்றத்திற்கு காணிக்கையாக்கியமையையும் கலைகண் வீடியோ பத்திரிகையின் வளர்ச்சிக்கு தமிழ் மன்றம் கொழுகொம்பாக இருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. கலைக்கண் வீடியோ இத்தயாரிப்பை தமிழ்மன்றத்திற்க்கு காணிக்கையாக்கி எமது வளர்ச்சிக்கு ஆதரவளித்ததற்கு தமிழ்மன்றம் நன்றி நவில்கிறது.

www.tamilarangam.net



# விளையாட்டுச் செய்திகள்



கடந்த 22.09.1991ஆம் திகதி அன்று போகும் விளையாட்டுக் கழகம் ஏற்பாடு செய்திருந்த பதினான்கு விளையாட்டுக் கழகங்கள் பங்கு பற்றிய கிறிக்கெட் சுற்றுப்போட்டியில் தமிழ்மன்றக் கிறிக்கெட்குழு இரண்டாவது இடத்தைப் பெற்றுக் கொண்டது.

தமிழ்மன்றக் கிறிக்கெட் அணியிற்கும் காஸ்ற் விளையாட்டுக்கழகத்தின் கிறிக்கெட் அணியிற்கும் இடையில் இடம்பெற்ற **ஆழிக்குமரன் ஆனந்தன் நினைவுக்கிண்ணப்போட்டி** 25-10-91 அன்று காஸ்ற் நகரில் இடம்பெற்றது. இம்முறையும் தமிழ்மன்ற அணி கடந்த வருடத்தைப்போல் வெற்றியீட்டி, வெற்றிக்கிண்ணத்தைத் தனதாக்கிக்கொண்டிருக்கின்றது.

# மன்றச் செய்திகள்

எதிர் வரும் 17.10.1991ஆம் திகதி வியாழக்கிழமை விஜயதசமி தினத்தன்று குழந்தைகளுக்கான ஏடுதொடக்கும் வைபவம் காலை பத்து மணியளவில் Mainkai 40ல் (தமிழ்மன்ற நூல்நிலையம்) இடம் பெறவுள்ளது. ஏடுதொடக்க விரும்பும் பெற்றோர்கள் பூஜைக்கு வேண்டிய பொருட்களுடன் காலந்தவறாது சமூகம் தரும்படி வேண்டிக்கொள்கின்றோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

21ஆம் பக்கத் தொடர்ச்சி....

1991ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் ஐந்து நாட்கள் துருக்கியில் நடைபெற்ற உலக கவிஞர் மகாநாட்டிற்குச் சென்று, பல நடுகள் பங்கு பற்றியிருந்த போதிலும், பல தமிழ்க் கவிஞர்கள் பங்கு கொண்டபோதிலும், உலகத் தமிழர்கள் பாராட்டி பொன் எழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய முறையில், அவரது இலக்கியத்திறனை அங்கு வாசித்தளித்து தமிழர்களுக்கு மாபெரும் புகழ் தேடித்தந்து, மகாநாட்டினரால் டாக்டர் என்னும் சிறப்புப் பட்டம் பெற்றுள்ளார். இவரது புகழ் ஒவ்வொரு தமிழனுக்கும் கிடைத்த புகழாகக் கருதி தனது தமிழினத்தை உலக நாடுகளில் எந்த மூலையில் இருந்தாலும் அவர்களைச் சந்திக்க வேண்டும், அவர்களுடன் உறவாடவேண்டும், இன்பத்தமிழை அவர்களுடன் கதைத்து சுவைக்க வேண்டும், அவர்கள் எப்படி வாழ்கின்றார்கள்? அவர்களின் குழந்தைகளின் எதிர் காலம் என்ன? என்று அறியும் ஆர்வத்துடன் மகாநாடு கண்டு, சிறப்புப் பட்டம் பெற்றுத் திரும்பும் வழியில் ஜேர்மனியில் சிலமணி நேரம் தங்கி, தமிழ்மன்றத்திற்கு விஜயம் செய்ததோடு, வேறு பலரையும் சந்தித்து அளவளாவி, தமிழ்மன்றத்தினையும், ஜேர்மன் வாழ் தமிழ் மக்களின் ஒற்றுமையையும் பற்றி பாராட்டிச் சென்றார்.

வா.மு.சேதுராமன் அவர்கள் இன்றுவரை ஐம்பத்தியேழு புத்தகங்களை எழுதி வெளியிட்டுள்ளார். இவரின் தமிழ் தொண்டாலும், கவித்திறமையாலும் ''பெருங்கவிக்கோ'', செந்தமிழ்க்கவிமணி, கவிஞர் குலத்திலகம், ஐயப்பன் அருட்கவியரசு, செந்தமிழ்க்கொண்டல், விழாச்செல்வர், கவிமலை, பாருலா வந்த பாவலர், காளமேகக் கவிச்சுடர், என்ற பல சிறப்புப் பட்டங்களைப் பெற்றார்.

*''என்றன் இனத்தை ஒன்று சேர்க்காமல்*
*இறுதி எனக்கு வராது*
*என்மொழி உலகாள வைக்கமல்*
*என்றன் உயிரோ போகாது''* எனும் கொள்கை கொண்டவர்.

இலக்கியத்துறையில் பல இலக்குகளை வென்றுகொண்டே செல்லும் பெருங்கவிக்கோவின் உயர்ந்த இலக்குகள் இரண்டு.

ஒன்று, உலகளவில் தமிழ், தமிழரின் இலக்கியங்களை புரிந்து கொள்ளக் கவிதைக்காக ''நோபல் பரிசு'' பெறுவது.

மற்றொன்று, உலகத் தமிழர்களின் இணைப்பு மையமாகப் பன்னாட்டுத் தமிழுறவு மன்றத்தின் நிலையத்தை சென்னையில் அமைப்பதாகும்.

*வாழ்க பெருங்கவிக்கோ!*
*வாழ்க அவர் தொண்டு!*

## விசேட விரத தினங்கள்

16-10-91 புதன் சரஸ்வதி பூசை
17-10-91 வியாழன் விஜய தசமி
கௌரி விரதாரம்பம்.
23-10-91 புதன் பூரணை விரதம்
25-10-91 வெள்ளி கார்த்திகை விரதம்
05-11-91 செவ்வாய் தீபாவளி
06-11-91 புதன் அமாவாசை விரதம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

07-11-91 வியாழன் கந்தஷஷ்டி
விரத ஆரம்பம்
10-11-91 ஞாயிறு சதுர்த்தி விரதம்
12-11-91 செவ்வாய் கந்தஷஷ்டி விரதம்
21-11-91 வியாழன் பூரணை விரதம்,
திருக்கார்திகை விரதம்
குமாராலய தீபம்
சர்வாலய தீபம்.
22-11-91 வெள்ளி விநாயக விரதாரம்பம்
05-12-91 வெள்ளி அமாவாசை விரதம்
10-12-91 செவ்வாய் சதுர்த்தி விரதம்
12-12-91 வியாழன் விநாயக ஷஷ்டி விரதம்
13-12-91 வெள்ளி திருவெம்பாவை ஆரம்பம்
17-12-91 செவ்வாய் வைகுண்ட ஏகாதசி
19-12-91 வியாழன் கார்த்திகை விரதம்
21-12-91 சனி பூரணை விரதம்
22-12-91 ஞாயிறு ஆருத்திரா தரிசனம்
04-01-92 சனி அமாவாசை விரதம்
09-01-92 வியாழன் சதுர்த்தி விரதம்
14-01-92 செவ்வாய் உத்தராயண
புண்ணிய காலம்
15-01-92 புதன் தைப் பொங்கல்
கார்த்திகை விரதம்
19-01-92 ஞாயிறு பூரணை விரதம்
20-01-92 திங்கள் தைப் பூசம்
03-02-92 திங்கள் அமாவாசை விரதம்
07-02-92 வெள்ளி சதுர்த்தி விரதம்
11-02-92 செவ்வாய் கார்த்திகை விரதம்
17-02-92 நடேசர் அபிஷேகம்
18-02-92 செவ்வாய் பூரணை விரதம்
மாசி மகம்
02-03-92 திங்கள் மஹா சிவராத்திரி விரதம்
04-03-92 புதன் அமாவாசை விரதம்
08-03-92 ஞாயிறு சதுர்த்தி விரதம்
10-03-92 செவ்வாய் கார்த்திகை விரதம்
18-03-92 புதன் பூரணை விரதம்
பங்குனி உத்தரம்
02-04-92 வியாழன் அமாவாசை விரதம்
06-04-92 திங்கள் சதுர்த்தி விரதம்
கார்த்திகை
11-04-92 திங்கள் ஸ்ரீ ராம நவமி

13-04-92 திங்கள் 18 விநாடி 45 நாழி, (மணி 1.35 பகல்)
ஆங்கீரச வருடப்பிறப்பு.
ஓ சரவணபவ


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அறிவித்தல்

Holland வாழ் தமிழ்மக்கள் அங்குள்ள சைவ ஆலயத்திற்கு ஓர் அர்ச்சகர் (ஐயர்) தேவையென்று ஓர் வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்கள். தகுதிகள் உள்ளவர்கள் விபரங்களுக்கு கடிதமூலம் தொடர்புகொள்ளவும்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:-

Mr.M.Gunaratnam,
Secretary of Tamil Mantram,
Roedelheimer Landstr 127,
6000 Frankfurt 90.

**Printed by**

**"TAMIL MANTRAM COMPUTER PRINTERS"**

**இது தமிழ் மன்றம் கொம்பியூட்டர் பதிப்பகத்தினால் அச்சிடப்பட்டு 12.10.1991 இல் வெளியிடப்பட்டது.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# செந்தூராஸ்

## SENNTHUTAS SUPER MARKET

உங்கள் அன்றாட தேவைகளுக்கு ஏற்ற பொருட்களை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்!

**செந்தூராஸ்**

ஆசிய உணவுப் பொருட்கள், மற்றும் மரக்கறி, மீன் வகைகளை உடனுக்குடன் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்!

**செந்தூராஸ்**

புதிய பழைய திரைப்படங்கள், பாடல்களை Video cassette, Audio cassette & CD ஆகிய வடிவங்களிலும்; தமிழ், ஆங்கில சஞ்சிகைகளையும், வாழ்த்துமடல்களையும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்!

**செந்தூராஸ்**

<u>குறிப்பு:</u> பட்டுச்சேலைகள், பலவர்ண ஆடைகள், தங்கநகைகள் யாவும் November மாதத்திற்குப் பின் பெற்றுக்கொள்ளலாம்.

*அத்துடன் உங்களுக்குத் தேவையான வெளிநாட்டுத்தொடர்புகள் TELEFAX மூலம் உடனடியாக மேற்கொள்ளப்பட்டுத் தரப்படும்.*

*உங்கள்*

*அன்பையும்*

*ஆதரவையும்*

*நாடும்*

*செந்தூராஸ் செந்தூராஸ் செந்தூராஸ்*

*SENNTHUTAS SUPER MARKET,*

*SCHUETZENSTR — 22,*

*4600 DORTMUND 1.*

*Tel: 0231/831337.*

*Fax: 0231/8230301.*

***

www.tamilarangam.net

# தமிழ் மன்ற கொம்பியூட்டர் பதிப்பகம்
## Tamil Mantram Computer Printers



அழகு தமிழில்

அழைப்பிதழ்கள், விளம்பரங்கள்,

பிரசுரங்கள் சிறுகையேடுகளை

கொம்பியூட்டர் தமிழ் எழுத்து வடிவத்தில்

மலிவுவிலையில் அச்சடித்துக்கொள்ள

தொடர்பு கொள்ள வேண்டியது.

**தமிழ்மன்றம் கம்பியூட்டர் பதிப்பகம்**

*பிராங்பேட் தமிழ்மன்றத்தின் ஓர் அங்கம்*

தொலைபேசி.இல. 069 / 431758

**Frankfurt**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்